வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 03 30.03.2022 புதன்கிழமை இதழ் : 115 பக்கங்கள் : 16



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# தமிழ் தேசிய கட்சிகள் எம். பிகள் ஓகஸ்டில் இந்தியா பயணமாவர்?

கொழும்பு, மார்ச் 30

**தமிழ்த் தேசியக் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் இந்தியா செல்வர் என்று இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து அறிய வருகிறது.**

**தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்ற இந்தியாவின் தலையீட்டைக் கோரி தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குக் கடிமொன்றை அனுப்பி இருந்தன.**

இந்தக் கடிதம் உட்பட அரசியல் தீர்வுத் திட்டம் சம்பந்தமாகக் கலந்துரையாடவே தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் புதுடில்லி செல்லவுள்ளனர்.

இந்தியப் பிரதமரை நேரில் சந்தித்து பேச்சு நடத்துவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சித்து வருகின்றது.

புதுடில்லி செல்லும் திட்டம் இரு தடவைகள் பிற்போடப்பட்டன. எனினும், ஓகஸ்ட் மாதளவில் இந்தச் சந்திப்பு நடைபெறுவதற்கான சாத்தியம் அதிகம் எனவும் இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

(ஐ)

## ஐந்தில் ஒரு பெண் துஷ்பிரயோகம்!

கொழும்பு, மார்ச் 30

இலங்கையில் ஐந்தில் ஒரு பெண் தனது வாழ்நாளில் ஒருமுறையாவது தனது துணையால் உடல் ரீதியாக அல்லது பாலியல் ரீதியாக துஷ்பிரயோகத்திற்கு ஆளாகி 15

## பிரச்னைகள் விரைவில் தீரும் பிரதமர் பதவியில் நீடிப்பேன்!

### மனம் திறந்தார் பிரதமர் மஹிந்த



கொழும்பு, மார்ச் 30

"பிரதமர் பதவியில் இருந்து ஓய்வுபெறும் எண்ணம் இல்லை. பதவிகாலம் முடிவும்வரை பதவியில் நீடிப்பேன்." இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நாட்டில் பிரச்னைகள் இருந்தபோதிலும், அவற்றை விரைவில் தீர்க்க அரசு செயற்பட்டு வருகிறது. அரசு மீது மக்கள் நம்பிக்கை இழக்கவில்லை. 15

## வடக்கு மக்களின் வாழ்வை சீரமைக்கும் சீன நிறுவனம்!

### ஸின்குவா செய்திச் சேவை தகவல்



பீஜிங், மார்ச் 30

வவுனியாவில் போக்குவரத்துக்கு பொருத்தமற்ற நிலையிலிருந்த, 100 கிலோமீற்றர் வீதியை புனரமைக்கும் திட்டமொன்றை சீன கட்டுமான நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

இதன் மூலம், அப்பகுதியிலுள்ள தமிழ் மக்களின் வாழ்வில், சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பல மாற்றங்களை ஏற்படுத்தியிருப்பதாக சீன உத்தியோக பூர்வ செய்தி சேவையான ஸின்குவா தெரிவித்திருக்கின்றது.

வீதிகள் புனரமைக்கப்படாத நிலையிலிருந்ததால், கிராமப் 15

## தமிழ் புத்தாண்டின் பின்னர் பாராளுமன்றத்தில் மாற்றம்!

### ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, மார்ச் 30

தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு பின்னர் பாராளுமன்றத்தில் மாற்றம் ஏற்படக்கூடும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிதி தலைவர் ருவான் 15

## இந்திய - இலங்கை நட்புறவை அழிக்க ஜெய்சங்கர் முயற்சி!

### பாரதிய ஜனதாவின் மூத்த தலைவர் குற்றச்சாட்டு!

கொழும்பு, மார்ச் 30

"வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் இலங்கை அரசாங்கம் பெற்றோல் தட்டுப்பாட்டை திறமையாக நிர்வகிக்கிறதா என்பதை சரிபார்க்க எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை ஆய்வு செய்தார். அவர் நம் உறவுகளை அழிக்க விரும்புகிறாரா? - இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் இந்தியாவை ஆளும் மத்திய அரசின் கட்சியான பாரதிய ஜனதாவின் மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி. 15

## வல்வெட்டித்துறை மீனவர் இந்தியக் கடலில் கைது!

சென்னை, மார்ச் 30

தமிழ்நாடு - கோடியக் கரைக்கு தென்கிழக்கே சுமார் 14 மைல் தொலைவில் இந்திய கடற் பாதுகாப்பு படை அதிகாரிகளால் நேற்றுக் காலை 7.30மணி அளவில் இலங்கை மீனவர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அத்துடன், அவரின் படகும் கைப்பற்றப்பட்டுள்ளது. 15

## இன்று நாடளாவிய ரீதியில் 10 மணி நேரம் மின்வெட்டு!

கொழும்பு, மார்ச் 30

நாடளாவிய ரீதியில் இன்று புதன்கிழமை 10 மணி நேரம் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இன்றைய தினம் ஜீ, எச், ஐ, ஜே, கே, எல் வலயங்களில் காலை 8 தொடக்கம் பிற்பகல் 2 மணி வரையும், பின்னர் மாலை 6 மணி தொடக்கம் 15

## 75 வீத இந்திய நன்கொடைக்காக வடக்கின் தீவுகள் வழங்கப்பட்டன!

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



கிளிநொச்சி, மார்ச் 30

இந்தியா வழங்கும் 75 வீத நன்கொடைக்காக வடக்கின் மூன்று தீவுகள் வழங்கப்படவுள்ளன என்று கடற்றொழில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கான முன்னாய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில், செய்தியாளர்களின் கேள்விகளுக்கு அமைச்சர் பதிலளித்தார்.

இதன்போது, மின் சக்தி திட்டத்திற்காக சீனாவுக்கு வழங்கப்படுவதாக இருந்த அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு ஆகியவை இந்தியா 15

## தேசிய அரசும் இல்லை பிரதமரும் மாறமாட்டார்!

### வதந்திகளை நம்பாதீர்கள் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, மார்ச் 30

"எமது அரசு தொடர்ந்தும் பயணிக்கும். தேசிய அரசு அமைக்கும் எண்ணம் எமக்கு இல்லை. பிரதமரை மாற்றும் யோசனையும் எமக்கு இல்லை. சிலரால் திட்டமிட்டு வெளியிடப்படும் வதந்திகளை எவரும் நம்ப வேண்டாம்."



- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றிடம் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"கடந்த நல்லாட்சி அரசாங்கத்தால் - தேசிய அரசால்தான் நாடு இந்தளவு நெருக்கடியைச் சந்தித்துள்ளது. இந்நிலையில், மீண்டுமொரு தேசிய அரசு எதற்கு?

எமது அரசு பெரும்பான்மைப் பலத்துடன் இன் 15

## இப்படியும் நடக்கிறது...!

தமிழ் அரசியல்பரப்பில் இன்றைய பேசுபொருள், இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கருக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்குமிடையே நடந்த சந்திப்பு பற்றிய செய்திகள்.

அந்தச் சந்திப்பில், அரசாங்கம் புதிதாக கொண்டுவர முயற்சி செய்யும் புதிய அரசியல்யாப்பில் அதிக நம்பிக்கை கொள்ளவேண்டாம் என்ற சாரப்பட அவர் தெரிவித்ததாக வெளிவந்த செய்திகளும், இதனை மறுத்துரைக்கும் செய்திகளும்தான் இன்று பேசுபொருள்.

உண்மைதான். அவர் அப்படிச் சொன்னாரா இல்லையா என்பதல்ல முக்கியம், அது எப்படி செய்தியானது என்பதை ஆராய முற்பட்டால், நமது தலைவர்களின் உச்சபட்ச இராஜதந்திரம் வெளிச்சத்திற்கு வந்துவிடும்.

இதற்கு முன்னரும் ஜெய்சங்கர் பலதடவைகள் இலங்கை வந்து சென்றிருக்கிறார். அவர் வருகின்றபோதெல்லாம் கூட்டமைப்பினரையும் சந்திக்கத் தவறுவதில்லை.

இப்படி சந்திக்கின்ற போதெல்லாம், அவ்வப்போது ஆட்சியிலிருக்கின்ற அரசாங்கங்கள் செய்கின்ற தமிழர் எதிர்ப்பு அரசியல் பற்றிய புகார்களையே கூட்டமைப்பினர் பட்டியலிடுவதுண்டு.

அதேபோல, அரச தரப்பினரும் கூட்டமைப்பினர் அரசுக்கு எதிராக, குறிப்பாக சர்வதேச மட்டத்தில் செய்கின்ற பிரச்சாரங்கள் குறித்தே புகார் கூறுவார்கள். அதாவது, ஒருவரையொருவர் குறைகூறுவார்கள்.

ஆனால், இந்தத் தடவை அவரது விஜயத்தின்போது அப்படி நடக்கவில்லை. மாறாக, ஜனாதிபதியுடன் நடந்த சந்திப்பின்போது, அவரும் கூட்டமைப்பினருடனான சந்திப்பில் நடந்தவற்றை விபரித்திருக்கிறார். தமிழ் மக்கள் அன்றாடம் எதிர்கொள்ளும் பிரச்னைகளை உடனடியாக கவனத்தில் எடுக்குமாறு கூட்டமைப்பினர் கேட்டுக்கொண்டதாகவும், அதனை தான் நிச்சயம் செய்வேன் என்றும், அரசியல் பிரச்னைகளை புதிய அரசியலமைப்பு தயாரிக்கப்படும்போது கவனத்தில்கொள்வதாக இணங்கப்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

அதன் பின்னரான கூட்டமைப்பினருடனான சந்திப்பிலும், ஜனாதிபதியுடனான தமது சந்திப்பில் என்ன நடந்தது என்பதைப் பற்றியே சம்பந்தனும் சுமந்திரனும் அவருக்கு எடுத்துக் கூறியிருக்கின்றனர்.

முதல்தடவையாக, அரச தரப்பும் கூட்டமைப்பும் ஜெய்சங்கருக்கு ஒரே விடயங்களைக் கூறியிருப்பது அவருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

சண்டை பிடிக்கும் இரண்டு தரப்புக்களிடையே சமாதானம் செய்ய வருபவருக்கு, இரண்டு தரப்பும் ஒற்றுமையாக இருந்தால் அவரது வேலை குறைந்துவிடும், ஏன், இல்லாமலேயே போய்விடலாம்.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அன்றாட பிரச்னைகள், பொருளாதார அபிவிருத்தி என்பவற்றையே அண்மைக்காலமாக இந்தியாவும் வலியுறுத்தி வந்திருக்கின்றது. அப்போதெல்லாம் இனப்பிரச்னைக்கான தீர்வு குறித்தே வலியுறுத்தி வந்த தமிழர் தரப்பு, இப்போது முதல்தடவையாக தீர்வு விடயத்தை பின் தள்ளி, உடனடிப் பிரச்னைகளுக்கு முக்கியத்துவம் வழங்கியிருப்பது இந்தியாவுக்கு மகிழ்ச்சியான ஒரு விடயம்தான்.

ஆனால், அதற்காக தீர்வு விடயத்தில் மீண்டும் கூட்டமைப்பு புதிய அரசியலமைப்பு வரும்வரை அதில் 'தொங்கிக்கொண்டிருக்கப்' போகின்றது என்பது, விக்கிரமாதித்தன் கதைபோல மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாகத்தான் தொடரப் போகின்றது என்பதையும் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

கொண்டுவரமுடியாமல் இருந்த அரசியலமைப்புக்காக ஐந்து வருடங்களை - நல்லாட்சி அரசு காலத்தில் அனாவசியமாக்கிய கூட்டமைப்பு, இப்போது கோட்டாபய அரசாங்கம் கொண்டுவரவிருக்கும் அரசியல்அமைப்பில் தொங்கப்போகின்றது என்பது மட்டும் தெரிகின்றது. சாதாரண பெரும்பான்மையையே தக்கவைக்க முயன்று கொண்டிருக்கும் ஓர் அரசாங்கம் எப்படி புதிய அரசியலமைப்பை கொண்டுவரமுடியும் என்பது குறித்து வேறு ஒரு பத்தியில் பார்ப்போம்.

நாம் இன்று சொல்ல வருவது, ஜெய்சங்கருடனான சந்திப்பு குறித்து வெளிவந்த செய்திகள் பற்றியதே. அரசாங்கம் புதிய அரசியலமைப்பை கொண்டுவருகின்றபோது அதில் பதின்மூன்றில் உள்ள மாகாண சபைகளும் இருக்குமா என்ற சந்தேகத்தை நீண்ட காலத்திற்கு முன்னரே ஜெய்சங்கர் தனது சந்திப்பு ஒன்றில் கூட்மைப்பினருக்கு தெரிவித்திருந்ததை கூட்டமைப்பினர் மறந்திருக்கமாட்டார்கள்.

இப்போதைய சந்திப்பிலும் அவர், "புதிய அரசமைப்பு விடயத்தில் கவனமாக இருங்கள். அதற்காகக் காத்திருக்காதீர்கள். அது முன்னரைப்போன்று இல்லாமலும்கூட இருக்கலாம். அத்துடன், புதிய அரசமைப்பு மூலம் தீர்வு காண முடியாத சூழல்கூட உருவாகலாம்" என்று எச்சரித்ததாக 'ஈழநாடு'வும் நேற்றைய தினம் செய்தி வெளியிட்டிருந்தது.

இவ்வாறு அவர் கூறியிருந்தாலும், ஓர் இராஜதந்திர அணுகுமுறையில் அதனை வெளியே செய்தி ஆக்குவது தவறான முன்னுதாரணமாகிவிடும் என்பதை சந்திப்பில் கலந்துகொண்டவர்கள் உணர்ந்திருந்தால், அது இவ்வாறு செய்தி ஆகியிருக்க வாய்ப்பில்லை.

அவர் சொன்னாரா சொல்லவில்லையா என்பது அல்ல இன்றைய பிரச்னை.

அவர் அப்படிச் சொல்லியிருந்தால், அது நம்மை எச்சரிப்பதற்காக - நமது நலனுக்காக சொன்னது. அதனை பொது வெளியில் தெரிவிக்கலாமா என்பதை நமது தலைவர்கள் அறியாதது நமது தலைவிதி.

அதை நொந்துகொள்வதைத் தவிர வேறு வழியில்லை!

**- ஊர்க்குருவி**

# பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களை கூட்ட அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 30

யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களை பிரதேச செயலக ரீதியாக மிக விரைவில் நடத்துமாறும் - அதற்கான திகதிகளை அறிவிக்குமாறும் பிரதமரின் இணைப்பு செயலாளரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கான பிரதமரின் பிரதிநிதியுமான கீதநாத் காசிலிங்கம் அரச அதிபருக்கு அறிவித்துள்ளார். இது தொடர்பில் யாழ். மாவட்ட அரச அதிபருக்கு அவர் அனுப்பி வைத்த கடிதத்தில்,

யாழ். மாவட்டத்தின் பிரதேச செயலக ரீதியாக நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவில் கலந்துரையாடி அபிவிருத்தித் திட்டங்களை விரைவாக மேற்கொள்வதற்கும் பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கும் ஏதுவாக யாழ்ப்பாண நிர்வாக மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களின் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களை பிரதேச செயலக ரீதியாக ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களுக்கான திகதிகளை அறியத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வீடுபுகுந்து கும்பல் தாக்குதல் இரு இளைஞர்கள் படுகாயம்!

யாழ்ப்பாணம், மார்ச் 30

கோப்பாயில் வீடொன்றுக்குள் புகுந்த வன்முறை கும்பல் நடத்திய தாக்குதலில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கானவர்களின் வீட்டிலிருந்து கோப்பாய் பொலிஸார் 3 வாள்களை கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

கோப்பாயிலுள்ள வீடொன்றினுள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு புகுந்த கும்பல் ஒன்று வீட்டில் இருந்த 30 வயது மற்றும் 26 வயதான இருவரை இரும்பு கம்பிகளால் தாக்கியதுடன் வாளால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டமையடுத்து அங்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை நடத்தினர். இதன்போதே, அவர்கள் 3 வாள்களை கைப்பற்றியுள்ளனர். தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# மரண அறிவித்தல்

தோற்றம்
15 - 08 - 1937



மறைவு
29 - 03 - 2022

## அப்புத்துரை இராசமணி

சிறுவிளானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை இராசமணி நேற்று (29.03.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - செல்லாச்சி தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - கண்ணாத்தை தம்பதிகளின் மருமகளும், அப்புத்துரையின் அன்பு மனைவியும் சத்தியராஜ், சத்தியபாலன், சத்தியஜீவன் ஆகியோரின் அன்புத் தாயாரும், குமாரி, கோனாரா, சரோஜாதேவி, கலாமதி ஆகியோரின் மாமியாரும், உதயசத்தியா, பிரமோதி சத்தியா, சந்துனி சத்தியா, ஜோனார்த்தன், நிருபன், ஓமேஸ் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான துரைராசா, குணரட்ணம், நடராசா, தியாகராசா, இரத்தினம், மகேஸ்வரி, புஷ்பராணி மற்றும் மங்கையர்க்கரசி, நமசிவாயம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு, பாக்கியம், கனகம்மா, நாகராசா, பாலசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2022) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக சிறுவிளான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**

ஈழநாடு
Eelanadu
30.03.2022 புதன்கிழமை
பிலவ வருடம், பங்குனி 16

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ஜெய்சங்கர் சொல்லாமல், சொன்னது?

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய் சங்கர், கூட்டமைப்புடனான சந்திப்பின்போது, வழக்கத்திற்கு மாறாக ஒரு விடயத்தை சுட்டிக்காட்டியிருக்கின்றார். அதாவது. அரசாங்கத்தின் அரசியல் யாப்பு முயற்சிகளுக்குள் சிக்கிவிடாதீர்கள். அண்மையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடிய விடயங்களை சம்பந்தன் பகிர்ந்து கொண்டபோதே, அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில், புதியதோர் அரசியல் யாப்பு தொடர்பில் சம்பந்தன் தரப்பு, காலத்தை விரயம் செய்திருந்தது. சம்பந் தன் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, ஒருமுறை கூட சம்பந் தன் இந்தியாவுக்கு செல்லவில்லை. புதிய அரசியல் யாப்பு முயற்சி வெற்றியளிக்காது - காலத்தை விரயம் செய்யாமல், அரசியலமைப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள குறைபாடுகளை நிவர்த்திசெய்து, ஆளுநரின் அதிகாரத்தை குறைக்கும் வகையிலான முயற்சிகளை செய்யுமாறு பலரும் கோரியிருந்தனர்.

பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. குறிப்பாக டி. பி. எல். எவ் தலைவர் சித்தார்த்தன், புதிய அரசியல் யாப்பில் தனக்கு நம்பிக் கையில்லை என்று தொடர்ச்சியாக கூறிக்கொண்டிருந்தார். ஆனால், சம்பந்தனும் சுமந்திரனுமே புதிய அரசியல் யாப்பு தொடர்பில் மக்களுக்கு நம்பிக்கையூட்டிக் கொண்டிருந்தனர்.

ரணில் - மைத்திரி கால சம்பந்தனின் அணுகுமுறை முற்றிலும் கொழும்பு மட்டும் போதுமானது என்னும் அடிப்படையில்தான் இருந் தது. இந்தியாவின் உதவி தேவையில்லை என்னும் அடிப்படையிலேயே சம்பந்தனும் சுமந்திரனும் செயல்பட்டுவந்தனர். ஆனால், அனைத்தும் தோல்விடைந்த நிலையிலேயே மீளவும் இந்தியாவின் தயவை நாடினர். இந்த அனுபத்திலிருந்தே ஜெய்சங்கர் இவ்வாறானதொரு கருத்தைத் தெரிவித்திருக்கின்றார். ஏற்கனவே, ரணில் - மைத்திரி கால அரசியலமைப்பு திட்டத்துக்குள் சிக்குப்பட்டு காலத்தை விரயம் செய்ததுபோல் மீளவும் செய்யாதீர்கள் - என்பதுதான் அவர் சொல்லா மல், சொன்ன செய்தி.

இலங்கையின் அரசியலமைப்பு பிரச்னையை வெறுமனே சட்டக் கண்கொண்டு நோக்கினால் அதிக விடயங்கள் விளங்காமலேயே போய்விடும். இலங்கையின் அரசியலமைப்பு விடயம் வெறும் சட்ட ரீதியில் தீர்க்கக் கூடிய பிரச்னையென்றால் பிரச்னைகள் எப்போதோ தீர்ந்திருக்கும். எனவே, விடயங்களை ஆழமாக விளங்கிக் கொண்டு, கூட்டமைப்பு, சூழ்நிலைமைகளுக்கு ஏற்ப விடயங்களைக் கையாள வேண்டும். முன்னைய அரசாங்கத்தில் எதிர்பார்த்த விடயங்கள் எவையும் நடைபெறாமல்போன பின்னர், இந்தியாவிடம் சென்றது போன்றல்லாமல், இந்தியா என்ன கூறுகின்றது - என்பதைத் துல்லிய மாகப் புரிந்துகொண்டு, அதற்கேற்ப செயல்படுவது தொடர்பிலேயே கூட்டமைப்பினர் சிந்திக்க வேண்டும். ஜெய்சங்கர் அவ்வாறு கூறிய தற்கு பின்னால் பிறிதொரு விடயமும் உண்டு. அதாவது, அரசாங்கம் தமிழர் பிரச்னையை ஓர் உள்நாட்டு பிரச்னையென்றவாறு வாதிட முயற்சிக்கின்றது. தமிழர் பிரச்னையில் இந்தியாவின் தலையீட்டை நுட்பமாக தவிர்க்க விரும்புகின்றது. அரசாங்கத்தின் நகர்வுகளுக்குள் சிக்கிவிடாதீர்கள் - சிக்கிக் கொண்டால், எங்களால் எதுவும் செய்ய முடியாமல் போய்விடும். ஜெய்சங்கர் சொல்லாமல் சொன்ன இன் னொரு செய்தி இது.

# ஜெய்சங்கரின் கருத்து!

**அலசுவது இராஜதந்திரி**

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் தமிழ்த் தேசிய கூட்ட மைப்பினரை சந்தித்து புதிய அரசியலமைப்பு ஒன்றை இலங்கை தயாரிக்கும்போது அது குறித்து எச்சரிக்கை யோடு - அவதானமாக இருங்கள் என்று கூறியிருந் தார். ஜெய்சங்கரின் இந்த எச்சரிக்கை தமிழ் தரப்பினர் மிகவும் கவனத்திலெடுக் கப்பட வேண்டியதொன் றாகவே இருக்கின்றது.

ஏனெனில், இந்தியாவில் எத்தனையோ இனங்கள் மற்றும் மொழிகள், மதங்கள், கலாசாரங்கள் என்பவை இருக்கின்றன. இவை யாவற்றையும் அனுசரித்து இந்தியாவை மாநில வாரியாக ஓர் ஐக்கியப்பட்ட தேசமாக வைத்திருப்பது டாக்டர். பீ. ஆர். அம்பேத் காரால் வடிவமைக்கப்பட்ட அரசியல மைப்பே என்பது குறிப்பிடத்தக்கது.



பன்முக தன்மையோடு மற்றும் பலதரப் பட்ட அம்சங்களை கொண்ட ஒரு நாட்டில் ஒவ்வோர் இனம் மற்றும் அதன் மொழி, ஏனைய தனித்துவங்கள் என்பவை அரசிய லமைப்பின் வாயிலாகவே உறுதி செய்யப் படுகின்றன. இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் அரசியலமைப்புகள் கொண்டு வரப்பட்டும், மாற்றங்களுக்கு உள்ளாகியும் வந்துள்ளன.

ஆனால், இலங்கையில் வடக்கு - கிழக்கு தமிழர்களுக்கு சமஷ்டி முறையிலான ஆட்சி முறையை சிங்களத் தலைவர்கள் வழங்க முன்வந்தபோது அதனை வேண்டாமென்று நிராகரித்தவர்கள் தமிழ் தலைவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுதுவிர, இலங்கையில் அரசியலமைப் புகள் கொண்டுவரப்பட்ட போதெல்லாம் அவற்றினூடாக வடக்கு - கிழக்கு மக்களின் தனித்துவங்கள் உறுதிசெய்யப்பட வேண்டு மென்பதை தமிழ் அரசியல் தலைமைகள் உறுதியாகக் கோரியிருக்கவில்லை.

தமது அரசியல் தேவைகளுக்காக எத னையும் அழுத்தம் திருத்தமாக கோராது பிரச்னைகள் தீர்க்கப்பட்டால் தமக்கு அரசியல் நடத்த எந்தவொரு விடயமும் இல்லாது போய்விடும் என்ற ரீதியிலேயே தமிழ் அரசியல் தரப்பு தனது அரசியல் நட வடிக்கைகளை மேற்கொண்டு வந்திருந்தது.

ஆனால், தற்போது இலங்கை சுதந்திர மடைந்து எழுபது ஆண்டுகளின் பின்னர் அரசியலமைப்பின் மூலமாக தீர்வொன்றை காணப்பட வேண்டியதன் அவசியத்தை இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெயசங்கர் தமிழ் தரப்புக்கு எடுத்து ரைத்துள்ளார்.

இதேவேளை, 1987ஆம் ஆண்டு இலங்கையின் அரசியலமைப்பில் 13ஆவது திருத்தச் சட்டம் இணைக்கப்பட்டுள்ள போதி லும் அந்தத் திருத்தச்சட்டம் வலுவற்றதாகவே இருக்கின்றது. பெயரளவில் மட்டுமே 13ஆவது திருத்தச்சட்டம் இருந்து வருகிறதே தவிர உருப்படியாக அதன் முழுமையான அமுலாக்கம் இடம்பெற்றிருக்கவில்லை.

13ஆவது திருத்தச் சட்டம் இலங்கையின் அரசியலமைப்பில் இடம்பெற்று அதன் அமுலாக்கம் இணைந்த வடக்கு - கிழக்கு மாகாணங்களின் அடிப்படையில் அமுலாக ஆரம்பித்தவேளை அதற்கு வேட்டுவைத்து அதன் செயல்பாட்டை தமிழீழ விடுதலைப் புலிகள் நிலைதளர வைத்திருந்தனர்.

தற்போது 13ஆவது திருத்தச்சட்ட அமுலாக்கமே வடக்கு - கிழக்கு பிரச்னைக்கு ஒரே தீர்வாக அமைய முடியும் என்ற நிலை வலுவடைந்துள்ள நிலையில் அதன் அமுலாக் கம் குறித்து இலங்கை வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை பொறுத்தவரை முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் அந்தத் திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்ட போது இலங்கையிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில் இலங்கைக்கு 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுலாக்க வந்திருந்த இந்திய அமைதிப் படையின் அரசியல் சார்ந்த நடவடிக்கைகளுக்கு பொறுப்பான விசேட அதிகாரியாக இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் பணி யாற்றியிருந்தார்.

எனவே, இன்றைய இந்திய அரசியல் வாதிகள் மற்றும் இராஜதந்திரிகள் ஆகியோ ரில் இலங்கை விவகாரம் தொடர்பாகவும் 13ஆவது திருத்தச்சட்டம் குறித்தும் நன்கு அறிந்தவராக கலாநிதி எஸ். ஜெய்சங்கர் விளங்குகின்றார்.

இந்நிலையில், இலங்கையில் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அமுலாக்கம் குறித்து தமிழ் தரப்பு குரல் கொடுத்து வருகின்ற நிலையில் இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கரின் பங்களிப்போடு ஆக்கபூர்வமான நடவடிக் கைகளை மேற்கொள்ள முடியும்.

இந்திய மத்தியஸ்தத்துடன் தமிழ் தரப்புக்கும் இலங்கை அரச தரப்புக்குமிடை யிலான பேச்சுக்களை முப்பத்தைந்து வருடங் களுக்கு முன்னர் நடத்தியது போல மீண்டும் நடத்தி ஒரு நிரந்தர தீர்வுக்கு வழியமைப்பதே 13ஆவது திருத்தச்சட்டத்தின் அமுலாக்கம் குறித்த ஆரோக்கியமான நடவடிக்கையாக இருக்க முடியும். •

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
பணியாளர்கள் கடமைகளை முடித்து நிம்மதி காண்பார்கள். சீரான அணுகுமுறையால் குறிக்கோளை அடைவீர்கள். சிக்கனமாக இருக்கவேண்டுமென்று தீர்மானிப்பீர்கள்.

**இடபம்**
திட்டமிட்ட செயல்களை முடிப்பீர்கள். சாதனை செய்வீர்கள். முன்னேற்றத்திற்கான புதிய வழியை கண்டுபிடிப்பீர்கள். உங்களது சிந்தனைகளை இன்று செயலாக்குவீர்கள்.

**மிதுனம்**
மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்வீர்கள். நீண்ட நாள் கனவுகள் இன்று எதிர்பாரத வகையில் நிறைவேறும். பிறருடன் பேசும் போது நிதானத்தை கையாளவும்.

**கடகம்**
உங்களுக்கு நம்பிக்கை தரும் விஷயங்கள் இன்று நடைபெறும். கடந்த கால கவலைகள் ஒவ்வொன்றாக மறைய ஆரம்பிக்கும். சில நல்ல முடிவுகள் இன்று எடுப்பீர்கள். நிதி நிலை சீராகும்.

**சிம்மம்**
நீண்ட காலம் உழைத்ததற்கான பலன் இன்று கிடைக்கும். பயணத்தால் மகிழ்ச்சியும், உடல் சோர்வும் ஏற்படும். வேலை கிடைப்பதற்கான முயற்சியைத் தீவிரப்படுத்துவீர்கள்.

**கன்னி**
நண்பர், உறவினர்களின் அருமையை உணர்வீர்கள். புதிய நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் வரவு சிறிது உயரும். பணியாளர்களுக்கு திருப்திகரமான சூழ்நிலை உருவாகும்.

**துலாம்**
உழைப்பால் உயருவீர்கள். வீண் வம்புகளால் வந்த பிரச்னைகள் தீரும். வாக்குவாதங்களால் உண்டான மன உளைச்சல் நீங்கும். பிறருடன் விட்டுக்கொடுத்து சென்று பிரச்னையில் இருந்து வெளிவருவீர்கள்.

**விருட்சிகம்**
முன்பிருந்த கசப்பான அனுபவம், விரக்தி உணர்வும் உங்களைவிட்டு நீங்கும். பிறருடன் கனிவாக பேசி அவர்களுக்கு தேவையான உதவி களை செய்வீர்கள். அனுபவ அறிவு வெளிப்படும். மன உறுதியுடன் இருப்பீர்கள்.

**தனுசு**
குடும்பத்தில் கலகலப்பான உரையாடலால் வீடு களைகட்டும். வேலை சம்மந்தமாக அலைச்சல், அதிருப்பதி வந்து நீங்கும். பணியிடத்தில் இருந்த சிரமங்கள் நீங்கும். பேச்சில் கவனமாயிருங்கள்.

**மகரம்**
நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். உடல்ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உற்சாகமான நாள். தைரியமான முடிவுகள் எடுப்பீர்கள். மகிழ்ச்சியான நாள்.

**கும்பம்**
நீங்கள் எதிர்பார்த்த சுபச்செய்தி கிடைக்கும். மகிழ்ச்சி கூடும். நீங்கள் கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைப்பதில் தாமதமாகும். சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள்.

**மீனம்**
சில விஷயங்களில் இறங்கி வர வேண்டியிருக்கலாம். குடும்பத்தினருக்காக செலவுகள் செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். முன்பு மனஸ்தாபம் ஏற்பட்ட நபருடன் மனம் விட்டுப்பேசி சரி செய்வீர்கள்.

# தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## வெளியுறவு அமைச்சகத்துக்கு நீதிமன்றம் உத்தரவு

சென்னை. மார்ச் 30

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 68 மீனவர்களை விடுவிக்க தேவையான நடவடிக்கை எடுக்க வெளியுறவு அமைச்சகத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், 1974ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கச்சத்தீவு ஒப்பந்தத்தில், கச்சத்தீவுக்கு புனித பயணம் செல்லும் பக்தர்களை, எந்தவித போக்குவரத்து ஆவணங்களும் இல்லாமல் அனுமதிக்க வேண்டும். இந்திய - இலங்கை கப்பல்கள், இரு நாட்டு கடல் பகுதிகளில் செல்ல உரிமை உள்ளது. இந்த ஒப்பந்தப் பிரிவுகளை அமல்படுத்த மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும். இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 68 பேரை விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படி மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது மீனவர்கள் எதற்காக எல்லை தாண்டி செல்கின்றனர். இந்த விவகாரம் தொடர்பாக இலங்கை நீதிமன்றத்தை தான் அணுக வேண்டும். அன்னிய நாட்டை இந்நீதிமன்ற உத்தரவால் நிர்வகிக்க முடியாது என நீதிபதிகள் கருத்து தெரிவித்தனர். மேலும், மீனவர்கள் கைது குறித்து அனுதாபம் தெரிவிக்க மட்டுமே முடியும். இந்திய அரசு இராஜாங்க ரீதியாக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்த தலைமை நீதிபதி, முடிவில்லாமல் நீண்டு கொண்டிருக்கும் இந்த பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என தமிழக அரசுக்கும் யோசனை தெரிவித்தார். பின்னர், 68 மீனவர்கள் விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய வெளியுறவு அமைச்சகத்துக்கு உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கை முடித்து வைத்தனர்.

# தொண்டர்களால் அரசியலுக்குள் நான் வலிந்து திணிக்கப்பட்டேன்!

## வாரிசு அரசியல் அல்ல என்கிறார் துரை வைகோ

“தொண்டர்களால் நான் அரசியலுக்குள் வலிந்து திணிக்கப்பட்டேன் என்பதே உண்மை. இதை வாரிசு அரசியல் என்று சொல்வதே தவறான வாதம்“ என்று தெரிவித்திருக்கின்றார் ம.தி.மு.க தலைமைக் கழகச் செயலாளராக அதிகாரபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் துரை வைகோ.

தி.மு.க-வின் வாரிசு அரசியலை எதிர்த்து வைகோ தொடங்கிய ம.தி.மு.க-வில், 28 வருடங்களுக்குப் பிறகு வைகோவின் மகனே கட்சிப் பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது கட்சிக்குள் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த நிலையில் நேர்காணல் ஒன்றில் துரை வைகோ தெரிவித்திருப்பதாவது:

“நான்கு வருடங்களுக்கு முன்புவரை, எனக்கு அரசியல் ஆர்வம் துளியும் இருந்ததில்லை. ஆனால், அப்பாவுக்கு வயதாகிவிட்டது. உடல்நிலை மோசமடைந்துவருகிறது. குறிப்பாக, மூன்றாண்டுகளுக்கு முன்பே திடீரென அப்பாவுக்கு இருதய நோய் வந்து, பேஸ் மேக்கர் கருவி பொருத்தப்பட்டது.

அது 2019 நாடாளுமன்றத் தேர்தல் நேரம். அவர் பிரசாரத்துக்குச் சென்றே ஆக வேண்டும் என்ற சூழலில், பிரசாரத் திட்டங்களை வகுக்கவும் அப்பாவின் உடல்நிலையை கவனித்துக்கொள்ளவும் நான் அரசியலுக்குள் வந்தேன். தொண்டர்களுக்கும் அப்பாவுக்கும் இடையே ஒரு பாலமாக இருந்தேன். இதைப் பார்த்த தொண்டர்களும் நிர்வாகிகளும், ‘தலைவரின் உடல்நிலையைக் கருத்தில்கொண்டு நீங்களும் தலைவரோடு பயணித்தாக வேண்டும்’ என்று அழுத்தம் கொடுத்தனர். ‘அரசியல் என்பது பெரிய நச்சுப்பாதை’ என்று தெரிந்திருந்ததால், நான் தொடர்ந்து மறுத்துவந்தேன். ஆனால், தொண்டர்களின் தொடர் வற்புறுத்தலால் நானும் அரசியலுக்குள் வர நேரிட்டது. ஆக, தொண்டர்களால் நான் அரசியலுக்குள் வலிந்து திணிக்கப்பட்டேன் என்பதே உண்மை. எனவே, இதை வாரிசு அரசியல் என்று சொல்வதே தவறான வாதம்.”

# முதல்வர் ஸ்டாலின் இன்று டில்லி பயணம் நாளை பிரதமர் மோடியை சந்திக்கிறார்!

சென்னை. மார்ச் 30

திமுகவின் ‘கலைஞர் அறிவாலயம்’ கட்டிடத்தை திறப்பதற்காக இன்று டில்லி செல்லும் முதல்வர் மு.க.ஸ்டாலின், நாளை பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர் அமித் ஷாவைச் சந்திக்கிறார்.

ஏப்ரல் 2ஆம் திகதி கலைஞர் அறிவாலயத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார். இதற்காக முதல்வர் இன்று மாலை டில்லி செல்கிறார். அதைத் தொடர்ந்து நாளை பிற்பகலில் பிரதமர் நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோரைச் சந்திக்கிறார். அப்போது, நீட் தேர்வு விலக்கு, தமிழகத்துக்கான பேரிடர்நிவாரண நிலுவைத் தொகையை வழங்க வலியுறுத்த உள்ளார்.

அதன்பின், ஏப்ரல் 1ஆம் திகதி காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, ராகுல் மற்றும் கம்யூ னிஸ்ட் கட்சிகளின் மூத்த தலை வர்கள் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்களைச் சந்திக்க முதல்வர் திட்டமிட் டுள்ளார். வரும் 2024ஆம் ஆண்டு நடைபெற உள்ள பாராளுமன்றத் தேர்தலுக்கு புதிய கூட்டணியை உருவாக்க தெலங்கானா முதல்வர் சந்திர சேகரராவ் முயற்சி எடுத்து வரும் நிலையில், முதல்வர் ஸ்டாலினும் புதிய அணியை உருவாக்க நடவடிக்கை எடுத்துள்ளார். இதன் ஒருபகுதியாக இந்தச் சந்திப்பு நிகழும் என கூறப்படுகிறது.

# சசிகலாவின் சுற்றுப்பயணத்தினால் அ.தி.மு.கவில் எந்த தாக்கமும் இல்லை

## முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கருத்து

சென்னை. மார்ச் 30

சசிகலாவின் சுற்றுப்பயணத்தால் அ.தி.மு.கவில் எந்த தாக்கமும் ஏற்படாது என்று முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறினார். சென்னை இராயபுரம் காவல்நிலையத்தில் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கையெழுத்திட்டார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த ஜெயக்குமார் கூறியதாவது:-

திருச்சி, மத்திய குற்றப்பிரிவு அலுவலகம், ராயபுரம் ஆகிய இடங்களில் கையெழுத்து போட செல்கின்றேன் அந்த அளவுக்கு என் கையெழுத்து இந்த அரசுக்கு முக்கியத்துவமாக உள்ளது. அதனால்தான் வழக்குகளால் தினம்தோறும் காவல்நிலையத்தில் கையெழுத்து போடுகிறேன். சசிகலாவின் சுற்றுப்பயணத்தால் அ.தி.மு.கவில் எந்த தாக்கமும் ஏற்படாது. சசிகலா சுற்றுப் பயணத்தால் எந்தவித பயனும் இல்லை. இந்தியா ஒரு சுதந்திர நாடு, அதனால் யாரும் எங்கும் செல்லலாம். எனவே சசிகலா வும் சுதந்திர பறாவையாக எங்கு வேண்டுமானாலும் சுற்றலாம் என்றார்.

## அன்பு வாழ்வு



இன்றைய நற்செய்தி இயேசு மேல் கோபம் கொண்ட பரிசேயருக்கு இயேசு அளித்த பதிலாகும். தந்தையும், தானும் ஒன்று என்றும் தந்தையின் வேலையையே தாம் செய்வதாகவும் இயேசு கூறுகின்றார். ஏனெனில் தந்தை என்னுள்ளும் நான் தந்தையுள்ளும் வாழ்கின்றோம். என்று கூறியுள்ளார்.

தந்தை படைப்புக் கடவுள். அனைத்துக்கும், அனைவருக்கும் உயிரளிப்பவர். மகனும் அவ்வாறே தாம் காணும் செயல்களையே செய்ய இயலாது. தந்தையிடம் தாம் காணும் செயல்களையே செய்ய இயலும். தந்தை செய்தவற்றை மகனும் செய்கின்றார். தந்தை இறந்தோரை எழுப்பி வாழ்வு கொடுத்தது போல் இயேசுவும் அவ்வாறே செய்கின்றார்.

திருமுழுக்கிலே இயேசு எம் பாவங்களிலிருந்து எம்மை விடுவித்து புது வாழ்வு தருவதற்கு தம் உயிரையே தம் ஆவியாரையே தருகின்றார். இவ் வாழ்வு ஆவியாரின் வாழ்வு, அன்பு வாழ்வு, புது வாழ்வு, உறவுகள் மலரும் வாழ்வு இன்னுமாக நாம் இறந்த பிற்பாடு விண்ணகத்திலே முடிவுற்ற உயிர் வாழ்வையும் நமக்களிக்கிறார் இயேசு.

எனவே இத் தவக்காலத்தில் இயேசுவோடு பயணிக்க அவரோடு அன்பு வாழ்வில் ஐக்கியமாகிக் கொள்வோம்.

**அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா.**

# சூழ்ச்சிக்காரர்கள் வெளியேற்றம் இந்த அரசை கவிழ்க்க முடியாது!

## மொட்டு கட்சி திட்டவட்டம்!



கொழும்பு, மார்ச் 30

**“சூழ்ச்சிக்காரர்கள் அரசிலிருந்து வெளியேறிவிட்டனர். எனவே, அரசின் இருப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை. இந்த அரசை எவராலும் கவிழ்க்கவே முடியாது.”**

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் மற்றும் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன ஆகியோர் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

அரசின் பாராளுமன்ற அணி பலமாகவே உள்ளது. எமது பக்கம் உள்ளவர்கள் மீது எமக்குப் பூரண நம்பிக்கை உள்ளது. அரசின் திட்டங்களை அவர்களும் நம்புகின்றனர். எனவே, பலமான அரசாக இந்தப் பொருளாதாரச் சவாலை வெற்றிகொள்வோம். அடுத்த தேர்தலில் வெற்றிநடையும் போடுவோம்.

சூழ்ச்சிக்காரர்கள் வெளியேறிவிட்டனர். அங்கும், இங்கும் சென்று ஒப்பாரி வைக்கின்றனர். முடிந்தால் 113 என்ற சாதாரணப் பெரும்பான்மையை இல்லாது செய்யுமாறு சவால் விடுக்கின்றோம். அது அவர்களால் முடியாது. நாம் கெஞ்சப்போவதும் இல்லை. பலம் பொருந்திய தலைவரான பஸில் ராஜபக்சவை வீழ்த்துவதற்கே முற்படுகின்றனர். அதற்கு நாம் இடமளிக்கமாட்டோம்-என்றனர். (அ)

# அரசை விரட்டியடிக்க சகலரும் திரள்வோம்!

## வேலுகுமார் அறைகூவல்



கொழும்பு, மார்ச் 30

“அரசாங்கத்தின் அசமந்த போக்கால் நாட்டு மக்கள் நடுரோட்டில் நிற்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அரசுக்கு எதிர்ப்பை தெரிவிக்க ஒன்றிணைவோம்.”

-இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணியின் நிதி செயலாளரும், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார் தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாடு வரலாறு காணாத பொருளாதார பின்னடைவை சந்தித்துள்ளது. மக்களின் நாளாந்த செயல்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் பல்வேறு வழிகளில் அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளனர். அத்தியாவசிய பொருட்களுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இன்றைய அரசாங்கத்தின் அசமந்த போக்கால், நாட்டு மக்கள் நடுரோட்டில் நிற்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட் டுள்ளனர்.

இன்றைய அரசாங்கம், நாட்டு மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை பெற்றுக்கொடுக்க முடியாத நிலையில் உள்ளது. நாளாந்த தேவைகளுக்கு அவசியமான சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய், உட்பட அனைத்து எரிபொருட்களையும் பெற்றுக் கொள்ள நீண்ட வரிசையில் காத்திருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

தாம் உயிர்வாழ்வதற்காக பொருட்களை வாங்க போலின்களில் நின்று தமது உயிரை இழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. வயது முதிர்ந்தவர்கள் தமது ஓய்வு காலத்தை நிம்மதியாக செலவிடுவதை விடுத்து போலின்களில் நின்று, நெரிசல்களில் அகப்பட்டு, உயிரை விடும் துர்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது. மறுபுறமாக போலின்களில் தோன்றியுள்ள மோதல்கள், கைகலப்புகளை தாண்டி, கொலை செய்யும் நிலைக்கு சென்றுள்ளது. இது நாடு மிக மோசமான நிலையை நோக்கி சென்றுக்கொன்றிருக்கின்றது என்பதையே காட்டுகின்றது.

மக்கள் பல்வேறு வழிகளிலும் மன உளைச்சலுக்கும், அழுத்தத்திற்கும் உள்ளாகியுள்ளனர். ஒரு புறம் தமது வருமான வழிகளை இழந்துள்ளனர். மறுபுறம் பொருட்களின் விலைவாசிகள் என்றும் இல்லாதவாறு பல மடங்கு அதிகரித்ததுள்ளது. பொருள் தட்டுப்பாட்டால் நாள் முழுவதும் போலின்களில் நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அதனால் தொழிலிற்கு செல்வதில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது. பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதில் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளது. போக்குவரத்து பிரச்சினை, எழுது கருவி பிரச்சினை என தொடருகின்றது. இவை பாரிய மக்கள் போராட்டமொன்று வெடிக்கும் நிலைமையை ஏற்படுத்தி வருகின்றது.

அரசாங்கத்தின் கொள்கை வகுப்புக்கள், திட்டமிடல்கள் தோல்வியடைந்துள்ளது. உரிய காலத்தில் தீர்மானங்களை எடுக்காமை, அனைத்திற்கும் பிற்போடப்பட்ட, காலம் தாழ்த்திய, அசமந்த போக்கினை கடைப்பிடித்தமை, இன்று இந்நிலைமையை தோற்றுவித்துள்ளது. எனினும் அரசாங்கம் இதனை புரிந்துகொண்டுள்ளதாக தெரியவில்லை. மேலும் மேலும் தற்காலிக மூடி மறைப்புகளை செய்வதையே அரசங்கம் முன்னெடுத்து வருகின்றது. அரசாங்கத்தின் இம் மூடி மறைப்பை வெளிச்சத்துக்கு கொண்டுவந்து மேலும் மோசமான நிலைமை தோன்றுவதை தடுக்க தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலவாக்கலை நகரில் நடைபெறும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அனைவரும் ஒன்றிணைவோம்-என்றார். (அ)

## நாணய நிதியத்தின் அறிக்கையை சபையில் முன்வைக்க அனுமதி!

கொழும்பு, மார்ச் 30

இலங்கை தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கை தொடர்பான அறிக்கை கடந்த 25 ஆம் திகதி வெளியானது. இவ்வறிக்கை மீது நாடாளுமன்றத்தில் விவாதம் வேண்டும் என எதிரணிகள் வலியுறுத்திவருகின்றன.

ஏப்ரல் முதல்வாரத்தில் விவாதத்தை வழங்குவது தொடர்பில் அரசு பரிசீலித்து வருகின்றது.

இந்நிலையிலேயே மேற்படி அறிக்கையை பாராளுமன்றத்தில் சமப்பிக்க, நிதி அமைச்சர் முன்வைத்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (அ)



### வவுனியா கூமாங்குளத்தில்

## 10 லட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக் குற்றிகள் சிக்கின!

வவுனியா, மார்ச் 30

வவுனியா கூமாங்குளத்தில் சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் மீட்கப்பட்டதாக பண்டாரிக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பண்டாரிக்குளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலிற்கமைய கூமாங்குளத்தில் உள்ள வெற்றுக்காணியில் இருந்தே 18 மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளதுடன் அப் பகுதியைச் சேர்ந்த 32வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார்.

குறித்த மரக்குற்றிகள் மடுவில் இருந்து சட்டவிரோதமான முறையிலே வெட்டப்பட்டு காட்டுப்பகுதியின் ஊடாக கடத்தபட்டு வவுனியா கூமாங்குளம் பகுதியில் உள்ள வெற்றுக் காணிக்கு கொண்டுவரப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை பண்டாரிக்குளம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (அ)

# சத்திர சிகிச்சை இடைநிறுத்தும் அறிவிப்பை மீளப் பெற்றது பேராதனை வைத்தியசாலை!

கொழும்பு, மார்ச் 30

மருந்துத் தட்டுப்பாடு காரணமாக ஏற்கனவே திட்டமிடப்பட்ட அனைத்து சத்திரசிகிச்சை நடவடிக்கைகளையும் தற்காலிகமாக இடைநிறுத்துவதாக பேராதனை போதனா வைத்தியசாலை அறிவித்திருந்த நிலையில் தற்போது அந்த அறிவிப்பை மீளப் பெறுவதாக அறிவித்துள்ளது.

மருத்துவ வழங்கல் பிரிவினால் உடனடியாகவே, மருந்துப் பொருட்கள் வழங்குவதை உறுதிப்படுத்த தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டதையடுத்து குறித்த அறிவிப்பினை மீளப் பெறுவதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்தியாவும் உடனடியாக தலையிட்டு தேவையான ஏற்பாடுகள் தொடப்பில் நடவடிக்கை எடுப்பதாக அறிவித்திருந்தமை தெரிந்ததே. (அ)

# பேராதனை மருத்துவமனை விவகாரம் உதவியளிப்பதற்கு தயாராகும் இந்தியா

கொழும்பு, மார்ச் 30

பேராதனை போதனா மருத்துவமனைக்கு எவ்வாறு உதவலாம் என ஆராயுமாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், இந்திய தூதுவருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நேற்று தொடக்கம் மருந்து தட்டுப்பாடு காரணமாக பேராதனை போதனா வைத்தியசாலையில் திட்டமிடப்பட்ட அனைத்து சத்திர சிகிச்சைகளும் இடைநிறுத்தப்படுவதாக மருத்துவமனை நிர்வாகம் அறிவித்தது.

அதற்கமைய அவசர சிகிச்சைகள் மாத்திரமே நடைபெறுவதாக வைத்தியசாலையின் பணிப்பாளர், மருத்துவர் எச்.எம் அர்ஜுன திலகரத்ன தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# இரட்டைக் குடியுரிமை உள்ளோர் உயர் பதவிகளை வகிக்க முடியாது

## வருகிறது புதிய சட்டமூலம் என்கிறார் கம்மன்பில

கொழும்பு, மார்ச் 30

**இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் இலங்கையில் உயர் பதவிகளை வகிப்பதற்கு தடை விதிக்ககோரும் அரசமைப்பு திருத்தம் அடுத்த மாதத்துக்குள் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று பிவிருது ஹெல உறுமயவின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**

தனிநபர் சட்டமூலமாகவே இதற்கான யோசனை முன்வைக்கப்படும் எனவும் அவர் கூறினார். இது 22ஆவது அரசமைப்பு திருத்தமாக கருத்தில் கொள்ளப்படும்.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் இரட்டை குடியுரிமை உடையவர்களுக்கு நீதிபதிகள், தூதுவர்கள் மற்றும் அரச நிர்வாக சேவையில் உயர் பதவிகளை வகிக்க முடியாது.

அத்துடன், பாராளுமன்றம் வரமுடியாது. தேர்தல்களில் போட்டியிடவும் முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)



# சவூதி அபிவிருத்தி நிதியம் இலங்கைக்கு நிதி உதவி

கொழும்பு, மார்ச் 30

இலங்கைக்கான சவூதி அபிவிருத்தி நிதியத்தின் உதவிகளைத் தொடர்ந்தும் வழங்க உத்தேசித்துள்ளதாக இலங்கைக்கான சவூதி தூதுவர் அப்துல் நாசர் ஹூசைன் அல் ஹார்தி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரிவித்தார்.

தனது சேவைக் காலத்தை முடித்துக் கொண்டு இந்நாட்டில் இருந்து வெளியேறிச் செல்லும் அப்துல் நாசர் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத் தில் ஜனாதிபதியை சந்தித்த போதே இதனைத் தெரிவித்தார்.

ஹூசைன் அல் ஹார்தியின் பதவிக்காலத்தில் அவர் வழங்கிய ஒத்துழைப்பிற்காக ஜனாதிபதி அவரைப் பாராட்டினார்.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையில் முதலீடு மற்றும் இலங்கையில் உள்ள ஏனைய முதலீட்டு வாய்ப்புகள் குறித்து ஆராய்வதற்காக சவூதி அரேபிய உயர்மட்டக் குழுவொன்று விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக ஹார்தி தெரிவித்தார்.

முதலீட்டு வலயங்களுடன் தொடர்புடைய பல சிறப்பு வரிச் சலுகைகள் உள்ளன. மருந்து, தொழிநுட்பம் மற்றும் ஆடைத் தொழில் துறைகளில் நேரடி முதலீட்டிற்கான பரந்த வாய்ப்புகள் இலங்கையில் இருப்பதாக ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

கொழும்பு துறைமுக நகர் மற்றும் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிர்மாணிக்கப் படவுள்ள உத்தேச கப்பல் பழுதுபார்ப்பு மற்றும் உற்பத்தி நிறுவனத்துடன் தொடர்புடைய முதலீட்டு வாய்ப்புகளில் முதலீடு செய்யுமாறு சவூதி அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி , சவூதி அபிவிருத்தி நிதியத்தின் மூலம் இந்நாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கு வழங்கிய உதவிக்கும் நன்றி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க மற்றும் சவூதி அரேபியாவின் இந்நாட்டுக்கான பிரதித் தூதுவர் திரு. அப்துல்லாஹ் ஏ.ஆர்கோபி ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். (அ)

# 24 மணிநேரத்தில் ஏற்பட்ட விபத்துக்களில் 6 பேர் மரணம்!

கொழும்பு, மார்ச்

நாட்டின் பல பாகங்களில் கடந்த 24 மணிநேரத்தில் ஏற்பட்ட வாகன விபத்துக் களால் 6 பேர் உயிரிழந்தனர்.

மாதம்பை, கடுபொத்த, தங்காலை, அலவ்வ மற்றும் நாரம்மல ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துக்களிலே இவர்கள் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் 19 வயதான இளைஞர் ஒருவரும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)



# இந்திய மீனவர்கள் நான்கு பேர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 30

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 4 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை நெடுந்தீவு அருகே இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் ஒரு படகையும் அதிலிருந்த 4 மீனவர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்களை மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்துக்கு அழைத்து சென்று கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. (அ-03)



# தேசிய வீட்டுத்தோட்ட செய்கை மன்னாரில் ஆரம்பித்து வைப்பு!

மன்னார், மார்ச் 30

முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் 22 லட்சம் வீட்டுத் தோட்டங்களை இலக்காகக் கொண்டு செயற்படுத்தப்படும் “ஹரித தெயக்“ தேசிய வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை திட்டம் மன்னார் மாவட்டத்திலும் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பெரிய நீல சேனை கிராமத்தில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம், மாவட்ட செயலகம் மற்றும் மன்னார் பிரதேச செயலகம் ஆகியவை இணைந்து குறித்த நிகழ்வை ஏற்பாடு செய்தன.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல்,மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப்,உற்பட விவசாயத் திணைக்கள அதிகாரிகள் ,சமுர்த்தி திணைக்கள அதிகாரிகள், அழைக்கப்பட்ட திணைக்கள பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இதன் போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நாற்றுகள்,மற்றும் விதைகள் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் குறித்த கிராமத்தில் உள்ள வீடுகளில் முன்னெடுக்கப்பட்டு வரும் வீட்டுத்தோட்டச் செய்கையையும் அதிகாரிகள் பார்வையிட்டதோடு, குறித்த செய்கையை ஊக்கு விக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் பயனாளர்களுடன் கலந்துரை யாடி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மரியசேவியர் அடிகளாரின் முதலாம் ஆண்டு நினைவு

யாழ்ப்பாணம், மார்ச் 30

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் “கலைத்தூது“ அருட்கலாநிதி நீ.மரிய சேவியர் அடிகளாரின் மறைவின் முதலாமாண்டு நினைவு நிகழ்வுகள் திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளன.

இதற்கமைவாக அன்றைய தினம் மு.ப.11.00 மணிக்கு யாழ்.தூய மரியன்னை பேராலயத்தில் நினைவுத் திருப்பலி இடம்பெறும்.

மாலை நிகழ்வுகள் இல. 15,றக்கா வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலாமுற்றத்தில் பி.ப.4.00 மணிக்கு ஆரம்பமாகும்.

சர்வமதத் தலைவர்களின் ஆசியுரைகளுடன் ஆரம்பமாகும் இந்த நிகழ்வுகளுக்கு மன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமை தாங்குவார். இதன் போது மரிய சேவியர் அடிகளாரின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவாலயத்தை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருள் திரு ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை திறந்து வைப்பார்.தொடர்ந்து இசை அஞ்சலி,நினைவஞ்சலி உரைகள் என்பவற்றுடன் மரிய சேவியர் அடிகளாரின் முதலாமாண்டு நினைவாக தொகுக்கப் பட்ட “மரியசேவியம்“ என்ற நூலின் வெளியீடும் இடம்பெறும்.

இந்நிகழ்வுகளில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது. (அ)

# இலங்கை தொடர்பாக எழுத வந்த சுற்றுலாப் பயணி துஷ்பிரயோகம்

கொழும்பு, மார்ச் 30

இலங்கைக்கு வருகை தந்த பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த பெண்ணைத் தொட்டு துஷ்பிரயோகம் செய்ய முயன்ற சிகிரியா, எஹெலகல பிரதேசத்தைச் சேர்ந்த ஹோட்டல் உரிமையாளரை சிகிரியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

33 வயதான பெல்ஜிய சுற்றுலாப் பயணி ஒருவர் மார்ச் 28 ஆம் திகதி சிகிரியா பொலிஸில் செய்த முறைப்பாட்டையடுத்து இந்தக் கைது இடம் பெற்றுள்ளது.

இந்தப் பெண் பல்வேறு நாடுகளுக்குச் சென்று சம்பந்தப்பட்ட நாடுகள் தொடர்பில் சஞ்சிகைகளுக்கு கட்டுரைகளை எழுதி வருவதாகவும், இம்முறை இலங்கை தொடர்பான கட்டுரையை எழுதுவதற்காக இலங்கை வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அங்கு வந்த அவர், சிகிரியா பகுதியில் உள்ள சுற்றுலா விடுதியில் தங்குவதற்கு ஒன்லைனில் முன்பதிவு செய்துள்ளார்.

அந்தப் பெண்ணிடம் பேசிய ஹோட்டல் உரிமையாளர், தான் ஒரு சீன அக்குபஞ்சர் மருத்துவர் என்றும், பலவிதமான நோய்களுக்கு சிகிச்சை அளிக்க முடியும் என்றும், முதுகு வலிக்கு சிகிச்சை அளிப்பதாகக் கூறி குறித்த பெண்ணின் உடலின் பல்வேறு பாகங்களைத் தொட்டதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தின் பின்னர் ஹோட்டலை விட்டு வெளியேறிய அவர் சிகிரியா பிரதேசத்தில் உள்ள மற்றுமொரு சுற்றுலா விடுதிக்குச் சென்று சிகிரியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் சிகிரியா, எஹெலகல பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய ஒருவரை சிகிரிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.சீகிரியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பிரதமர் பதவியை கோரவேயில்லை

### கூறுகிறார் ரணில்



கொழும்பு, மார்ச் 30

“பிரதமர் பதவியை வழங்குமாறு இந்த அரசிடம் நான் கோரிக்கை விடுக்கவில்லை. தேசிய வேலைத்திட்டமொன்றை உருவாக்குமாறே வலியுறுத்தியுள்ளேன்.”

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

பிரதமர் பதவியை பொறுப்பேற்குமாறு எனக்கு எவரும் அழைப்பு விடுக்கவில்லை. நானும் அப்பதவியை கேட்கவில்லை. தற்போதைய சூழ்நிலையில் தேசிய வேலைத் திட்டமொன்றே அவசியம். அதன்மூலம் நாட்டு மக்களுக்கு நன்மை கிடைக்க வேண்டும்.

இனவாதம் பேசும் அரசியல் இனியும் வேண்டாம், அந்த அரசியல் கலாசாரம் மாற வேண்டும்-என்றார். (அ)

# நிதி அமைச்சரை நீக்குவதே இன்றைய காலத்தின் தேவை

### விமல் வீரவன்ஸ வலியுறுத்தல்



**கொழும்பு, மார்ச் 30**

**இன்றைய தேவை ஜனாதிபதி பதவி விலகுவதல்ல நிதியமைச்சரை நீக்குவதே என முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.**

தொலைக்காட்சி நேரலை விவாதம் ஒன்றில் பங்கேற்று கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

புதிய எதிர்க்கட்சிக் குழுவை உருவாக்கி பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி ஆசனங்களில் அமர்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் ஆளும் தரப்பின் பெரும்பான்மையை இழக்கச் செய்வதே தமது நோக்கம் எனவும் விமல் வீரவன்ஸ கூறினார். (அ)

# மைத்திரிக்கு வீட்டை வழங்க நீதிமன்றம் இடைக்கால தடை

கொழும்பு, மார்ச் 30

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கொழும்பு மஹகமசேகர மாவத்தையில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தை கையளிப்பதற்கான அமைச்சரவை தீர்மானத்தை இடைநிறுத்தி உயர்நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது.

நேற்றிலிருந்து 4 வாரங்களின் பின்னர் இந்த உத்தரவு அமுலுக்கு வருவுள்ளதாகவும் நீதிமன்ற தெரிவித்துள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை பரிசீலித்த பிரீத்தி பத்மன் சூரசேன, யசந்த கோதாகொட மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. (அ)



# பயன்தரு மரக்கன்று வழங்கும் நிகழ்வு யாழ். மாவட்டத்தில்!

யாழ்ப்பாணம், மார்ச் 30

தேசிய வீட்டுத்தோட்ட பயிற்செய்கை வேலைத் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் பயனாளிகளுக்கு பயன்தரு மரக்கன்று வழங்கும் நிகழ்வு யாழ்.மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்றது.

பசுமையான ஒரு தேசம் தேசிய வீட்டுத்தோட்ட பயிற்செய்கை புரட்சி என்னும் ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கு அமைய நாடு பூராகவும் வீட்டுத்தோட்ட பயிற்சிசெய்கை வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்திற்குரிய நிகழ்வு நேற்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 84042 வீட்டுத் தோட்டங்கள் அமைக்கப்படவுள்ள நிலையில் குறித்த வேலைத் திட்டத்திற்கான ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றதோடு ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் குறித்த வேலைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 80 ரூபா பெறுமதியான ஆறு விதை பொதியுடன் பத்து மிளகாய், கத்தரி கறிமிளகாய் கன்றுகள் இரண்டு பழ மரக்கன்றுகள் இரண்டு தென்னங்கன்றுகள் ஒவ்வொரு குடும்பத்துக்கும் வழங்கிவைக்கப்பட்டது.

இதேவேளை குறித்த வீட்டு தோட்டத்தை மேம்படுத்துவதற்காக மேலதிகமாக அரசாங்கத்தினால் தலா ஒவ்வொரு குடும்பத்திற்கும் 3000 ரூபா பணமும் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கான தேசிய வீட்டுத்தோட்ட பயிற்செய்கை ஆரம்ப நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், யாழ்.மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் மற்றும் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் யாழ்ப்பாண பிரதேச செயலாளர் மற்றும் யாழ்.மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (அ)

# சம்பிக்கவின் மனு நிராகரிப்பு!

கொழும்பு, மார்ச் 30

முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் சாட்சி விசாரணையை இடைநிறுத்த உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

கடந்த 2016 ஆம் ஆண்டு இராஜகிரிய பிரதேசத்தில் கவனக்குறைவாக வாகனத்தை செலுத்திய இளைஞரொருவருக்கு ஏற்பட்ட பாரிய விபத்து தொடர்பான சாட்சியங்களை மறைத்ததாக குற்றம் சுமத்தப்பட்டு குறித்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (அ)

# மன்னாரில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உலருணவுப் பொதி

மன்னார், மார்ச் 30

நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடியால் மன்னார் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலர் உணவு பொதிகளை வழங்க மெசிடோ நிறுவனம் முன்வந்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடி, அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் காரணமாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் மன்னார் மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற மற்றும் கூலித் தொழிலை மேற்கொள்ளும் குடும்பங்கள், பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பல்வேறு இடர்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் மன்னார் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள 1200 குடும்பங்களுக்கான உலர் உணவு பொதிகளை முதல் கட்டமாக வழங்க மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் (மெசிடோ) முன் வந்துள்ளது.

குறித்த குடும்பங்களுக்கு அவசர தேவையாக உள்ள அரிசி, மா, சீனி பொருட்களை உடனடியாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும் மொத்த வியாபார நிலையங்களில் அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் நிலவி வருகின்ற நிலையில் மக்களுக்கு வழங்க வேண்டிய நிவாரணப் பணிகளில் தாமதம் அடைவதாக மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிறடோ தெரிவித்தார்.

எனினும் துரித கதியில் குறித்த உலர் உணவு பொருட்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

# பொலிஸ் உத்தியோகத்தர்கள்மீது கோப்பாயில் வைத்து தாக்குதல்!

யாழ்ப்பாணம், மார்ச் 30

நீதிமன்ற பிடிவிறாந்தை நிறைவேற்ற சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட யோகபுரம் பகுதியை சேர்ந்த இருவருக்கு நீதிமன்ற வழக்கு விசாரணைகளுக்கு செல்ல தவறியமையால் நீதிமன்றினால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டு இருந்தது.

நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்த சென்ற கோப்பாய் பொலிஸ் பொலிஸ் நிலையத்தை சேர்ந்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவரையும் கைது செய்ய முயன்ற போது , அங்கு நின்ற கும்பல் ஒன்று இரு பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்ததுடன், அவர்கள் மீதும் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். அதனை அடுத்து அங்கிருந்து விலகி இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் பொலிஸ் நிலையம் திரும்பியுள்ளனர்.சம்பவம்தொடர்பில்பொலிஸார் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளனர். (அ)

# காணாமற்போன மாணவி நேற்று சடலமாக மீட்பு!

கொழும்பு, மார்ச் 30

பெல்மடுல்ல - உடதுல பகுதியிலுள்ள கிரிந்திஎல கால்வாயிலிருந்து பாடசாலை மாணவியொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பெருந்துடுவ பகுதியைச் சேர்ந்த 16 வயதான மாணவியொருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

லெல்லுபிட்டி பகுதிக்கு செல்வதாக கடந்த 26 ஆம் திகதி வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற சிறுமியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமி நீரில் மூழ்கிக் காணாமற்போயிருந்தமை பின்னர் தெரியவந்ததுடன், அவருடன் சென்ற 03 நண்பர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)



**ஞெகிழிப் பயன்பாடு இல்லாத உலகை இப்போது நினைத்துப் பார்ப்பது சிரமம்தான். என்றாலும், பொதுமக்களுக்கு நுண்ஞெகிழிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் மேற்கத்திய நாடுகள் பலவகை முன்னெடுப்புகளை எடுத்துள்ளன.**

கு.கணேசன்



# நுண்ஞெகிழி; நம்மை நெருங்கும் பேராபத்து!

கோடை வெயில் இப்போதே கொளுத்தத் தொடங்கிவிட்டது. தாகம் தீர்க்க எந்தத் தயக்கமும் இல்லாமல் போத்தல் தண்ணீரை லிட்டர் கணக்கில் வாங்கிக் குடிக்கிறோம். அந்தத் தண்ணீரில் நுண்ஞெகிழி கலந்திருக்கிறது என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? நம் கண்ணுக்குத் தெரியாமல், தண்ணீர் வழியாக வயிற்றுக்குள் செல்லும் ‘மைக்ரோபிளாஸ்டிக்’ (Micro plastic) எனும் நுண்ணிய ஞெகிழித் துகள்கள் உடலுக்கு நஞ்சாவது குறித்து சூழலியலாளர்கள் எச்சரித்துக் கால் நூற்றாண்டு கடந்துவிட்டது.

ஆனால், அந்த ஆபத்தை அறியாமல் இருப்பவர்கள்தான் நம்மிடம் அதிகம். இந்தச் சூழலில், ஞெகிழித் துகள்கள் ஆபத்தை 100% உறுதிசெய்யும் விதமாக, நெதர்லாந்தில் நடைபெற்ற ஆய்வின் முடிவு ஒன்று தற்போது மருத்துவத் துறையில் பரபரப்பாகப் பேசப்பட்டு வருகிறது. அதைத் தெரிந்துகொள்வதற்கு முன்பு, நுண்ஞெகிழித் தொடர்பில் சில அரிய செய்திகளை அறிவோம்.

அளவில் 5 மி.மீ.க்கும் குறைவாக உள்ள ஞெகிழித் துகள்களை ‘நுண்ஞெகிழி’ என்கிறோம். பொதுவாக, ஞெகிழிப் பொருட்கள் சிதையும்போது உருவாகும் நுண் துகள்தான் இந்த ‘வில்லன்’கள். காலையில் எழுந்ததும் பல் துலக்கப் பயன்படுத்தும் பற்பசை, பல்துலக்கி, முகம் கழுவ உதவும் ‘ஃபேஸ்வாஷ்’ தொடங்கி, ஆடைகள், உணவுக் கலம், தண்ணீர் பாட்டில், பைகள் என நம் அன்றாடப் பயன்பாடு பலவற்றிலும் ஞெகிழிப் பயன்பாடு உள்ளது. சாதாரணமாக நாம் பயன்படுத்திவிட்டுத் தூக்கி எறியும் ஞெகிழிப் பொருட்கள் உடைந்தும் சிதைந்தும் நிலத்திலும் நீரிலும் கலந்துவிடுகின்றன.

அந்த நிலத்தில் விளையும் காய்கறிகளையும் பழங்களையும் சாப்பிடும்போது அவை நம் உடலுக்குள் புகுந்துவிடுகின்றன. ஞெகிழிக் கலத்தில் உள்ள நீரையோ ஞெகிழி கலந்த நீரையோ பருகும்போது இதே பிரச்சினை ஏற்படுகிறது. ஞெகிழிக் கழிவுகள் வருடந்தோறும் டன் கணக்கில் கடல்நீரில் கொட்டப்படுகின்றன. இவற்றை உணவாகக் கொள்ளும் மீன்கள் உள்ளிட்ட கடல்வாழ் உயிரிகளால் உணவுச் சங்கிலி மூலம் நுண்ஞெகிழி நம்மை வந்தடைகிறது. ஞெகிழிப் பொருட்கள் எரிக்கப்படுவதால் விளையும் நச்சுப்புகை காற்றில் கலக்கும்போது, நாம் சுவாசிக்கும் காற்று மாசடைகிறது. அந்தக் காற்றின் வழியாக நுண்ஞெகிழித் துகள்கள் நம்மை வந்தடைகின்றன. இந்த வழிகள் மட்டுமல்லாமல், நாம் பயன்படுத்தும் அழகு சாதனப் பொருட்கள் மற்றும் பேக்கிங் பொருட்கள் வழியாக நுண்ஞெகிழி நம் உடலில் சேர்வதும் உண்டு.

கால் நூற்றாண்டுக்கு முன்பு வரை நுண்ஞெகிழித் துகள்களால் உயிரிப் பன்மைக்கு ஆபத்து இல்லை என்றே அறிவியல் உலகம் நம்பிக்கொண்டிருந்தது. 2008-ல் மார்க்கஸ் எரிக்ஸனும் மார்க் பிரவுனியும் தனித்தனியாக மேற்கொண்ட ஆராய்ச்சி முடிவுகள் இந்த நம்பிக்கையைக் குலைத்துப்போட்டன. வடக்கு பசிபிக் கடலில் இருந்த மீனின் உடலுக்குள் 18 வகை நுண்ஞெகிழிகள் இருந்ததைப் படம்பிடித்தார் எரிக்ஸன். இது பெரும் அதிர்வலையை உருவாக்கியது. அதைத் தொடர்ந்து நுண்ஞெகிழித் துகள்களால் உருவாகும் ஆபத்துகளை உணரத் தீவிரமாகப் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

‘நுண்ஞெகிழிகளைக் கடல்வாழ் உயிரினங்கள் இரையாக நினைத்து உட்கொள்கின்றன. இதனால் அவற்றின் உடல் உறுப்புகள் சிதைவடைகின்றன. சுவாசப் பிரச்சினை, உணவுச் சங்கிலி பாதிப்பு என அவை எதிர்கொள்ளும் இன்னல்கள் ஏராளம். இவற்றோடு அவற்றின் வாழ்க்கைச் சுழற்சியும் கடுமையாகப் பாதிக்கப்படுகிறது. பல லட்சக்கணக்கான கடல்வாழ் உயிரிகள் அழிகின்றன’ என்கின்றனர் கடல் ஆராய்ச்சியாளர்கள். இவர்களின் அறைகூவலை உறுதிசெய்யும் விதமாக சென்னை பட்டினப்பாக்கத்தில் விற்கப்பட்ட 7 மீன் வகைகளில் ஞெகிழித் துகள்கள் கலந்திருப்பதாகத் தேசியக் கடலோர ஆராய்ச்சி மையம் நடத்திய ஓர் ஆய்வில் தெரியவந்தது.

இந்தத் தகவல்களைத் தொடர்ந்து மனிதர்களின் உடலுக்குள்ளும் நுண்ஞெகிழிகள் புகுந்துள்ளன எனும் தகவல் அடுத்த அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. இவற்றில் 2018-ல் ஆஸ்திரேலியாவில் வியன்னா பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வு முக்கியமானது. ஐரோப்பிய நாடுகளிலிருந்து 3 ஆண்கள், 5 பெண்கள் என 8 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டனர். ஒரு வாரம் அவர்கள் எடுத்துக்கொண்ட கடல் உணவு வகைகள், ஞெகிழி உறை யில் கொண்டுவரப்பட்ட உணவு வகைகள், ஞெகிழி போத்தல் தண்ணீர் ஆகியவை குறிப்பெடுக்கப்பட்டன. ஒவ்வொரு நாளும் அவர்களின் கழிவுகள் சோதிக்கப்பட்டன. ஆய்வின் முடிவில் மனிதக் கழிவுகளில் நுண்ஞெகிழிகள் இருப்பது கண்டறியப்பட்டன. இதைத் தொடர்ந்து, இத்தாலியில் 8 கர்ப்பிணிகளிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பனிக்குடச் சவ்விலும் நஞ்சுக்கொடியின் அருகிலும் சிசுவின் மலத்திலும் நுண்ஞெகிழிகள் இருக்கின்றன என்று வந்த தகவல் மருத்துவத் துறையினரைத் திடுக்கிட வைத்துள்ளது.

சமீபத்தில் நெதர்லாந்தில் 22 தன்னார்வலர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், 17 பேரின் இரத்த அணுக்களில் நுண்ஞெகிழிகள் காணப்பட்டன. இவர்களிடம் காணப்பட்ட முக்கிய நுண்ஞெகிழிகள், தண்ணீர் போத்தல் பயன்படுத்தப்படும் பாலிஎத்திலின் டெரிப்தலேட் (PET), பேக்கிங் பொருட்களில் பயன்படுத்தப்படும் பாலிஸ்டிரின் (Polystyrene), கேரிபேக்குகளில் பயன்படுத்தப்படும் பாலிஎத்திலின் (Polyethylene). 2040இல் இந்த நுகர்பொருட்களின் உற்பத்தி 2 மடங்காக அதிகரிக்கும் என்று பொருளாதார வல்லுநர்கள் அறிவித்திருக்கும் சூழலில், இந்த ஆய்வின் முடிவுகள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன.

நுண்ஞெகிழிகள் இரத்தத்தின் வழியாக உடலுக்குள் பயணம் செய்யலாம் என்றுதான் இதுவரை அறியப்பட்டது. இப்போது முதல் முறையாக நுண்ஞெகிழிகள் இரத்த அணுக்களையே பாதிக்கும் எனும் தகவல் வெளிவந்திருக்கிறது. இதை அவ்வளவு எளிதாகக் கடந்துவிட முடியாது. காரணம், இந்தத் துகள்கள் இரத்த அணுக்களைச் சிதைப்பதில் தொடங்கி, உடலுக்குள் ஒக்ஸிஜன் விநியோகத்துக்குத் தடை போடுவது, குடல், எலும்பு, நரம்பு, சிறுநீரகம் எனப் பல்வேறு உடல் உறுப்புகளில் பதியமாகி அந்த உறுப்புகளையும் சிதைப்பது எனப் பேராபத்துகளை ஏற்படுத்துவதும் இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது. மலட்டுத்தன்மை, ஹார்மோன் பாதிப்புகள், புற்றுநோய் உள்ளிட்ட ஆபத்துகளையும் இவை ஏற்படுத்தலாம் என்ற அளவில் பேசப்படுகிறது. போகப்போக இந்த ஆய்வுகளை விரிவுபடுத்தும்போது மேற்சொன்ன ஆபத்துகள் உறுதிசெய்யப்படலாம். தற்போதைய காரணம் தெரியாத மரணங்களுக்கு இவைகூடக் காரணமாக இருக்கலாம்.

ஞெகிழிப் பயன்பாடு இல்லாத உலகை இப்போது நினைத்துப் பார்ப்பது சிரமம்தான். என்றாலும், பொது மக்களுக்கு நுண்ஞெகிழிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் மேற்கத்திய நாடுகள் பலவகை முன்னெடுப்புகளை எடுத்துள்ளன. இங்கு நுண்ஞெகிழி தொடர்பான ஆய்வுகள் குறைவு என்பதால், இதன் பாதிப்புகள் நம் கண்களுக்குத் தெரியாமல் கண்ணாமூச்சி காண்பிக்கின்றன.

நுகர்பொருட்கள் மூலம் மக்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் புதிது புதிதாகப் பாதிப்புகள் ஏற்படும்போது, அவை குறித்த விளைவுகளை மக்களுக்கு உரிய நேரத்தில் தெரியப்படுத்த வேண்டியது அரசுகளின் கடமை. அந்த விளைவுகளை உடனடியாக மக்கள் எதிர்கொள்வதற்கும் காலப்போக்கில் அவற்றை நிரந்தரமாகத் தவிர்ப்பதற்கும் தேவையான வழிமுறைகளைச் சுட்டிக்காட்டி, பொது ஆரோக்கியம் காப்பதற்கு அரசுகள் முனைப்புடன் செயல்பட வேண்டும். தேவைப்பட்டால், ஞெகிழிப் பொருட்கள் பயன்பாடு குறித்த பழைய சட்டங்களை நீக்கிவிட்டு, புதிய சட்டங்களை இயற்றி, அவற்றை மிகுந்த கண்டிப்புடன் நடைமுறைப்படுத்த அரசு இயந்திரம் தயாராக வேண்டும்.

ஞெகிழிப் பயன்பாட்டை அறவே நிறுத்தும்வரை திடக்கழிவு மேலாண்மையில் இன்னும் அதிக கவனம் செலுத்தி, அதன் பயன்பாட்டைக் குறைக்கவும், ஞெகிழிக் கழிவுகளை அகற்றவும் அரசுகள் வழிகாட்ட வேண்டும். உபயோகிப்பது உடையானாலும், உபகரணம் ஆனாலும், மீண்டும் பயன்படுத்தக்கூடிய, முழுதாக மறுசுழற்சி செய்யக்கூடிய ஞெகிழிப் பொருட்களையே பயன்படுத்த வேண்டும் என்பதில் மக்களும் அரசுகளும் அக்கறை காட்ட வேண்டும். இல்லாவிட்டால், கண்ணுக்குத் தெரியும் ஞெகிழிப் பொருட்களால் ஏற்படும் ஆபத்துகளை விட கண்ணுக்குத் தெரியாத நுண்ஞெகிழிகளால் ஏற்படும் ஆபத்துகள் பல மடங்கு அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும். ஆகவே, அரசுகளும் பொதுமக்களும் விழித்துக்கொள்ள வேண்டிய நேரம் இது! ■

# ஜெய்சங்கரின் கொழும்பு விஜயமும் கையெழுத்தான ஒப்பந்தங்களும்

நிருபமா சுப்பிரமணியன், சுபாஜித் றோய்

**இந்திய பெருங்கடலில் முக்கியத்துவம், தனித்துவ அடையாளம், கலாச்சார உறவுகள் ஆகியவற்றில் ஒப்பந்தங்கள் கையெழுத்து; இவை உதவிக்கு அப்பாற்பட்ட இந்தியா - இலங்கை ஒப்பந்தங்கள்.**



இலங்கை விமானப் படைக்கான இந்திய டோர்னியர் விமானங்களுக்கான ஒப்பந்தம் முடிவடைந்த சில நாட்களுக்குப் பிறகு, கொழும்பில் உள்ள இலங்கை கடற்படைத் தலைமையகத்தில் பாரத் எலெக்ட்ரானிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தால் அமைக்கப்படவுள்ள கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையம் (MRCC) மூலம் இந்தியாவும் இலங்கையும் இந்தியப் பெருங்கடலில் தங்கள் ஒத்துழைப்பை முன்னெடுத்துள்ளன.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ் ஜெய்சங்கர் இலங்கைக்கு விஜயம் செய்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோரை சந்தித்த போது, திங்கட்கிழமை இலங்கை தலைநகரில் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்களில் எம்.ஆர்.சி.சி.க்கான புரிந்துணர்வு ஒப்பந்தமும் ஒன்று.

மற்றுமொரு புரிந்துணர்வு ஒப்பந்தம் யாழ்பாணத்திற்கு அப்பால் உள்ள மூன்று தீவுகளில் இந்தியா சூரிய மற்றும் காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பது ஆகும். அங்கு பாதுகாப்பு காரணங்களுக்காக இந்தியா எதிர்ப்பு தெரிவித்ததை அடுத்து இலங்கை இதே போன்ற சீன திட்டத்தை இரத்து செய்தது. இந்த தீவுகள் தமிழக கடற்கரையோரத்தில் இராமேஸ்வரத்திற்கு மிக அருகில் உள்ளன.

ஜெய்சங்கர் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட கலாச்சார மையத்தையும் இணைய வழிமூலுமாக திறந்து வைத்தார். இந்த மையம் "நல்லிணக்க" திட்டமாக கருதப்பட்டு, இந்திய நிதி உதவியுடன் கட்டப்பட்டது. இலங்கையில் உள்ள பௌத்த தலங்களை பராமரிக்க இந்தியா 15 மில்லியன் டொலர்களை இந்தியா மானியமாக வழங்குகிறது. வெளிநாட்டு சேவை நிறுவனம் மற்றும் கொழும்பை தளமாகக் கொண்ட பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்புக்கான மற்றொரு ஒப்பந்தமும் கையெழுத்தானது.

MRCC ஒப்பந்தத்தின் விதிமுறைகளின் கீழ், ஹம்பாந்தோட்டையில் கடல்சார் மீட்பு துணை மையம் ஒன்று அமைக்கப்பட உள்ளது, அங்கு சீன அரசுக்கு சொந்தமான கப்பல் மற்றும் தளவாட நிறுவனமான China Merchants Port Holdings, கொழும்பிற்கு அடுத்தபடியாக இரண்டாவது பெரிய இலங்கை துறைமுகத்தை நடத்தி வருகிறது.

தெற்கில் காலி, மட்டக்களப்பு, திருகோணமலை, கிழக்குக் கடற்கரையில் மற்றும் வடக்கில் முள்ளிக்குளம் மற்றும் பருத்தித்துறை ஆகிய ஏழு துணைப் பிரிவுகளைக் கொண்ட MRCC வலையமைப்பை BEL நிறுவனம் இலங்கைக் கடற்கரை முழுவதும் கடற்படைத் தளங்களில் அமைக்கும். இது, முக்கியமாக, தற்போது இல்லாத இந்தியப் பெருங்கடலின் ஒரு பகுதியில் இந்தியாவுக்கு முக்கியத்துவத்தைக் கொடுக்கும்.

ஆசுஊஊ வலையமைப்பு என்பது இலங்கையின் தற்போதைய தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்கு அதிக ஆற்றலையும் ஆழத்தையும் வழங்குவதுடன், இந்தியாவின் உதவி தேவைப்படும் பட்சத்தில் நேரடித் தகவல்தொடர்புகளை மேம்படுத்துவதாகும். கடந்த ஆண்டு, இலங்கை கடற்பரப்பில் தீப்பிடித்து எரிந்த இரண்டு கப்பல்களுக்கு இந்திய கடலோர காவல்படை உதவி செய்தது.

இந்த மாத தொடக்கத்தில், நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் இந்திய பயணத்தின் போது, இரண்டு தரப்பினரும் ஒரு உடன்படிக்கையை இறுதி செய்தனர், இதன் கீழ் இந்தியா மூன்று டோர்னியர் விமானங்களை இலங்கை விமானப்படைக்கு வழங்க உள்ளது. அதே பயணத்தின் போது, இலங்கை தனது கடற்படைக்கு 4,000 மீ மிதக்கும் கப்பல்துறையை இந்தியாவிடமிருந்து பரிசாக ஏற்றுக் கொண்டது.

மாலைதீவுகள் மற்றும் சமீபத்தில் சேர்க்கப்பட்ட மொரீஷியஸ் ஆகிய நாடுகளும், கடத்தல், பயங்கரவாதம், போதைப்பொருள் கடத்தல் மற்றும் சட்டவிரோத மீன்பிடித்தல் மற்றும் வேட்டையாடுதல் ஆகியவற்றுக்கு எதிராக கடல்சார் பாதுகாப்பில் நெருக்கமான ஒத்துழைப்பைக் கருதும் கொழும்பு பாதுகாப்பு மாநாட்டில் உள்ளன.

பங்களாதேஷ், மியான்மர், தாய்லாந்து மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைக் கொண்ட பிம்ஸ்டெக் பிராந்தியக் குழுவின் அமைச்சர்கள் மாநாட்டிற்காக ஜெய்சங்கர் கொழும்புக்கு பயணம் செய்துள்ளார். தலைவராக, இலங்கை இன்று உச்சிமா நாட்டை நடத்துகிறது.

ஆனால், முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடியின் போது இலங்கைக்கு உதவுவதில் இந்தியா ஈடுபட்டுள்ள நிலையில், இந்த பயணம் கணிசமான இருதரப்பு கூறுகளை உள்ளடக்கியுள்ளது.

இந்தியா பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் 2.4 பில்லியன் டொலர் நிதி உதவியை இலங்கைக்கு வழங்கியுள்ளது. இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு உதவுவதற்கும், பல்வேறு கூட்டுத் திட்டங்களுக்கும் நிபுணர்களை நியமித்து வருகிறது. மார்ச் 17 அன்று அறிவிக்கப்பட்ட 1-பில்லியன் டொலருக்கும் மேலாக, கூடுதல் 1-பில்லியன் டொலர் உதவியை இலங்கை இந்தியாவிடம் கோரியுள்ளதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் அறிந்திருக்கிறது.

ஜெய்சங்கர், இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுடன் இந்தியாவைச் சேர்ந்த முக்கிய தகவல் தொழில்நுட்ப நிறுவனமான ஹெச்சிஎல் டெக்னாலஜிஸ் அலுவலகத்துக்கும் சென்றார். HCL Technologies இலங்கையின் முதலீட்டுச் சபையுடன் (BOI) கைகோர்த்ததன் பின்னர் 2020 இல் இலங்கையில் செயற்பாடுகளை ஆரம்பித்தது.

ஜெய்சங்கர் மற்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ,எல்.பீரிஸ் ஆகியோர் முன்னிலையில் இந்தியாவின் மானிய உதவியுடன் இலங்கை தனித்துவ டிஜிட்டல் அடையாள (SL-UDI) திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இது இந்தியாவின் ஆதார் மாதிரியாக இருக்கும். காலி மாவட்டத்தில் 200 பாடசாலைகளில் கணனி ஆய்வகங்களை அமைப்பதற்கான ஒப்பந்தம் திங்கட்கிழமை கையெழுத்திடப்பட்ட மற்றுமொரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆகும்.



ஜெய்சங்கர் இலங்கை தமிழ் தலைவர்கள் குழுவையும் சந்தித்தார். கடந்த வெள்ளிக்கிழமை, 2020 பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு முதன்முறையாக தமிழ் எம்.பி.க்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சந்தித்தார். இரண்டு மணி நேரம் நடைபெற்ற இந்த சந்திப்பில் வடக்கு, கிழக்கிற்கான அதிகாரப் பகிர்வு தொடர்பான அரசியல் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடல்கள் எதுவும் இடம்பெறவில்லை.

தமிழர்கள் பெரும்பான்மையாக உள்ள பகுதிகளுக்கான மேம்பாட்டு நிதியை ராஜபக்ஷ அறிவித்தார், மேலும் சந்தேக நபர்களை விடுவித்தல், "உண்மை கண்டறியும் பொறிமுறையை" தொடங் குதல் மற்றும் "காணாமல் போனவர்கள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பது" உள்ளிட்ட பல பிரச்சினைகள் குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களுக்கு விளக்கமளித்துள்ளதாக ஜனாதிபதி அலுவலகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இரண்டு முறை கூட்டம் திட்டமிடப்பட்டது, ஆனால் இரண்டு முறையும் ரத்து செய்யப்பட்டது. 1987 இல் இந்தியாவின் வற்புறுத்தலின் பேரில் புகுத்தப்பட்ட 13வது திருத்தத்தை அமுல்படுத்துமாறு ராஜபக்ஷவை இந்தியாவைக் கோரி தமிழ் தேசிய கூட்டமைப்பு சமீபத்தில் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியது குறிப்பிடத்தக்கது.

**- இந்தியன் எக்ஸ்பிரஸ்**

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**24)** பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

..........................................................................

**25)** 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................................................

**26)** **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | ............ | ......... |

**27)** கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

..........................................................................

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



..........................................................................

**29)** ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

.......................................................................... (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30)** சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)   2)   3) 

**31)** வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி 2) இரணைமடுக்குளம் 3) பராக்கிரமபாகு சமுத்திரம்

**32)** உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்டில் எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம் 2) உதிப்பு 3) உடலைத் தளர்த்தல்

**33)** தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன் 2) வாளேந்திய சிங்கம் 3) நெற்கதிர்



**34)** பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976 2) 1851 3) 1815

**35)** வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு 2) இறப்பர், தாழம்பூ 3) பிறைப்பூ, நாவல்

**36)** பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

**37)** நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

**38)** தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று

1)   2)   3) 

**39)** கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


**40)** இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

**41)** அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

**42)** பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

**43)** கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

**44)** எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

**45)** 


படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடியாக நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

## விடைகள்

**24.** 11100ml / 1100ml
**25.** ரூபாய் 144.00
**26.** 1) 190 2) 100 3) 290
**27.** 15 : 30
**28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1 **31.** 2 **32.** 3
**33.** 2 **34.** 3 **35.** 2
**36.** 3 **37.** 1 **38.** 1
**39.** 2 **40.** 3 **41.** 3
**42.** 1 **43.** 3 **44.** 3
**45.** 2

## கல்வி tv CHANNEL-1

**30.03.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் மறு ஒளிபரப்பு | மாதிரி வினாத்தாள் மறுஒளிபரப்பு-LIVE கணிதம் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

## கல்வி tv CHANNEL - 2

**30.03.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



## ஹெரோயின், துவக்குடன் திருமலையில் பெண் கைது!

திருகோணமலை, மார்ச் 30

கட்டுத்துவக்கு மற்றும் ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண் ஒருவரை கைது செய்துள்ளதாக சீனன்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

சீனன்குடா இரகசிய பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து வீடொன்றைச் சோதனையிட்டபோது அனுமதிப்பத்திரம் இன்றி வைத்திருந்த கட்டுதுவக்கு ஒன்றும், 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சோதனைக்கு உட்படுத்தப்பட்ட வீட்டிலிருந்து 33 வயதுடைய பெண்ணொருவரை சந்தேகத்தின்பேரில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண் வழங்கிய வாக்குமூலத்திற்கு அமைய, கைப்பற்றப்பட்ட கட்டுத்துவக்கு மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் அவருடைய தந்தையுடையது என ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும், பெண்ணின் தந்தை வீட்டில் இருக்கவில்லை எனவும், வேலை நிமித்தம் கொழும்பு சென்றிருந்தார் என்றும் வாக்குமூலம் அளித்துள்ளார்.

பெண்ணின் தந்தையை சீனன்குடா பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகுமாறு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான பெண்ணை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# மூதூரில் ஆலய காணியை சுவீகரிக்க தொல்பொருள் திணைக்களம் முயற்சி

## - மக்கள் எதிர்ப்பால் கைவிட்டு சென்றனர் -

மூதூர், மார்ச் 30

**திருகோணமலை - மூதூர் - கிளிவெட்டி முத்துமாரியம்பாள் ஆலயத்துக்கு சொந்தமான காணியை தொல்பொருள் திணைக்களம் அளவீடு செய்ய சென்றதால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.**

அந்தக் கோயிலுக்குச் சொந்தமான 20 பேர்ச் காணியையே தொல்பொருள் திணைக்களமும் நில அளவை திணைக்களமும் அளவீடு செய்ய சென்றன.

இதையடுத்து அந்தப் பகுதி மக்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதி பொதுச் செயலாளர் ஸ்ரீஞானேஸ்வரனும் அங்கு சென்றிருந்தார்.

எமது ஆலயங்களை அபகரிக்காதே, எமது மத உரிமைகளை மதியுங்கள், இன, மத ஒற்றுமையை சீர்குலைக்காதே, எமது ஆலயம் பூர்வீக வரலாறு கொண்டது, நில ஆக்கிரமிப்பு வேண்டாம், தொல்லியலின் போர்வையில் நில ஆக்கிரமிப்பை நிறுத்து போன்ற வாசகங்களை உள்ளடக்கிய வகையில் பதாகைகளை ஏந்தியவாறு கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

மக்களின் எதிர்ப்பை அடுத்து அங்கு வந்த தொல்பொருள் திணைக்களத்தினரும், நிலஅளவைத் திணைக்களத்தினரும் தமது முயற்சியை கைவிட்டுச் சென்றனர். (ஐ)



## பவுஸர் - ஓட்டோ மோதி விபத்து; சிறுமி உட்பட நால்வர் படுகாயம்!

நிந்தவூர், மார்ச் 30

எரிபொருள் தாங்கி வாகனமும் (பவுஸர்) ஓட்டோவும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் சிறுமி ஒருவர் உட்பட நால்வர் படுகாயங்களுக்கு இலக்காகினர்.

அம்பாறை - நிந்தவூர் பிரதான வீதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அக்கரைப்பற்றில் இருந்து சம்மாந்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஓட்டோவும் கல்முனையில் இருந்து அக்கரைப்பற்று



நோக்கிச் சென்று கொண்டிருந்த சாய்ந்தமருது பெற்றோல் முகவர் நிலைய அதிபர் ஒருவருக்கு சொந்தமான எரிபொருள் தாங்கி வாகனமும் நேருக்கு நேர் மோதியே விபத்து ஏற்பட்டது.

இதன்போது ஓட்டோ பலத்த சேதத்துக்கு உள்ளாகியதுடன், ஓட்டோவில் பயணித்த சிறுமி உட்பட நால்வர் பலத்த காயங்களுக்கு உள்ளாகி, நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சித்திரவேலாயுதர் ஆலயத்தின் மண்டப கோட்டைக்கு அடிக்கல்!



திருக்கோவில், மார்ச் 30

கிழக்கிலங்கை வரலாற்று பழைமையும் பெருமையுமிக்க திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்துக்கான திருச் சுற்று மண்டப கோட்டைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வு ஆலய தலைவர் எஸ். சுரேஷ் தலைமையில் ஆலய வடக்கு திசையில் சுப வேளையில் இடம்பெற்று இருந்தன.

இதன்போது ஆலய குரு சிவஸ்ரீ நீதிநாதர் அங்குசநாதக் குருக்களால் மூலமூர்த்தியான முருகப் பெருமானுக்கு பூஜைகள் இடம்பெற்று தொடர்ந்து புனித கல்லானது ஆலயத்தை சுற்றி கொண்டு வரப்பட்டு பூமி பூஜைகள் இடம்பெற்று இருந்தன.

இதனைத் தொடர்ந்து ஆலய குருவினால் முதலில் கல் நடப்பட்டதைத் தொடர்ந்து ஆலய வண்ணக்கர் நிருவாகிகள் மற்றும் அதிதிகளால் திருச் சுற்று மண்டப கோட்டைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றன.

இந்நிகழ்வில் ஆலய வண்ணக்கர் வ. ஜயந்தன், திருக்கோவில் பிரதேசசபை தவிசாளர் இ.வி.கமலராஜன், சபை உறுப்பினர் எஸ்.சசிகுமார், ஆலய மற்றும் ஆச்சாரியார் ஸ்தபதி எம்.குமார், திருஞானவாணி முத்தமிழ் இசை மன்ற தலைவர் ஏ. கணேசமூர்த்தி, வட்டாரப் பிரதி நிதிகள் ஆலய நிருவாகிகள் தொண்டர்கள் என பலர் பங்கேற்றனர். (ஐ)

## சேதன பசளை விநியோகம் கச்சேரியில் விசேட கூட்டம்!

மட்டக்களப்பு, மார்ச் 30

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான சேதனபசளை விநியோகம் தொடர்பான மாவட்ட குழுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

சுபீட்சத்தின் நோக்கு தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நஞ்சற்ற உணவு, வளமான தேசத்தைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்திற்கு அமைவாக அரசாங்கம் முன் னெடுத்துள்ள சேதன பசளைகளை விவசாயிகளுக்கு வழங்குவது தொடர்பில் இதில் ஆராயப்பட்டன.

இம்முறை 32ஆயிரம் ஹெக்ரெயரில் சிறுபோக பயிர்ச்



செய்கை நடைபெறவுள்ளது. இவர்களுக்கான உரத்தை எதிர்வரும் ஏப்ரல் 10ஆம் திகதிக்கு முன்னர் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன் தலைமையில் நடைபெற்ற குழுகூட்டத்தில் விவசாய இராஜாங்க அமைச்சின் செயலாளர் ரணசிங்க, அமைச்சின் மேலதிக செயலாளர் கம்மன்பில், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சனி சிறீகாந்த், இராணுவ அதிகாரிகள், மாகாண மற்றும் மாவட்ட விவசாய திணைக்கள பணிப்பாளர்கள் உரக்கூட்டுத்தாபன அதிகாரிகள், விவசாய அமைப்பின் பிரதிநிதிகள் உட்பட அரச திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ஐ)

## ஒலுவில் துறைமுக மக்கள் கவனவீர்ப்புப் போராட்டம்!

அட்டாளைச்சேனை, மார்ச் 30

ஒலுவில் துறைமுக மீள் குடியேற்ற வீட்டுத் திட்டத்திலுள்ள துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான காணியை மீள் குடியேற்ற கிராமத்தின் பொதுத் தேவைக்கு வழங்குமாறு, அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்கு முன்னால் பொதுமக்கள் நேற்று முன்தினம் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 16 வருடங்களாக இந்த வீட்டுத் திட்டத்தில் குடியிருக்கும் குடியிருப்பாளர்களுக்கு சகல வசதிகளும் செய்து தரப்படுமென வாக்குறுதியளிக்கப்பட்டு நிறைவேற்றப்படவில்லையென, அந்த மக்கள் குற்றஞ்சாட்டினார்.

பொதுத் தேவைக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணியை துறைமுக அதிகார சபையால் தனியாருக்கு பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதைக் கண்டித்தும், இந்தக் காணியைப் பொதுத் தேவைகளுக்காக வழங்குமாறு வலியுறுத்தியும் இந்த வீட்டுத் திட்டத்தில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் கோரியே, கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். மேற்படி கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டது. (ஐ)



சிறந்த நடிகருக்குச் சீறி வந்த கோபம்!

# மனைவியின் தலையை கேலி செய்த அறிவிப்பாளரது கன்னத்தில் 'பளார்'!

## ஒஸ்கார் விருதை இழப்பாரா ஸ்மித்?



லொஸ்ஏஞ்சல்ஸ், மார்ச் 30

நகைச்சுவை என்ற பேரில் தனி மனித உணர்வுகளைத் தாக்கக் கூடிய கேலிகள் எந்த அளவுக்கு விபரீதமாகிவிடலாம் என்பதனை ஒஸ்கார் விருது விழா மேடையில் நிகழ்ந்த ஒரு சம்பவம் உணர்த்தியிருக்கிறது.

உலகப் பெரும் சினிமா விழா மேடையில் ஹொலிவூட் நடிகர் ஒருவர் அறிவிப்பாளரைக் கன்னத்தில் அறைந்த காட்சி உலகெங்கும் சோசல் மீடியாக்களில் வைரலாகப் பரவிக்கொண்டிருக்கிறது.

94 ஆவது ஒஸ்கார் சினிமா விருது வழங்கும் விழா ஞாயிற்றுக்கிழமை லொஸ் ஏஞ்சல்சில் கோலாகலமாக நடைபெற்றது. அமெரிக்காவின் பிரபல நகைச்சுவை நடிகர் கிறிஸ் ரொக் மேடையில் விழாவைத் தொகுத்து வழங்கும் அறிவிப்பாளராகப் பங்கேற்றார். அவரது வழக்க மான நையாண்டிகளில் பார்வையாளர்கள் லயித்திருந்த சமயத்தில் அந்தச் சம்பவம் நடந்தது.

சிறந்த நடிகருக்கான விருது பெற்ற வில் ஸ்மித் திடீரென எழுந்து சென்று மேடையில் ஏறி அறிவிப்பாளர் கிறிஸ் ரொக்கின் கன்னத்தில் பளார் என அறைந்தார். பல நூற்றுக்கணக்கான பார்வையாளர்கள் அதனையும் நகைச்சுவைக் காட்சி என்றே நம்பினர்.

அறிவிப்பாளரை அறைந்துவிட்டுத் தன் ஆசனத்தில் சென்று அமர்ந்த ஸ்மித்

""இனிமேலாவது என் மனைவியின் பெயரை உச்சரிக்காமல் வாயை மூடிக் கொண்டிரு" என்று கத்தியபோது தான் சம்பவத்தின் விபரீதம் ஏனையோருக்குப் புரிந்தது.

வில் ஸ்மித்தின் மனைவி ஜடா பிங்கெட் அலோபீசியா என்கின்ற தலை முடி முற்றாக உதிர்ந்து போகின்ற நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார். அவரது மொட்டைத் தலையைக் குறிப்பிட்டு கிண்டல் செய்த கிறிஸ் ரொக் மொட்டைத் தலையுடனான ஒரு பாத்திரத் தில் நடிப்பதற்கு அவர் நீண்ட காலம் காத்திருக்கவேண்டி இருக்காது என்று நையாண்டி செய்தார்.

தனது மனைவியின் தலைமுடி உதிர்வதை மேடையில் கிறிஸ் ரொக் பகிரங் கமாக்கிக் கேலி செய்தது வில் ஸ்மித்தை வெகுண்டெழ வைத்தது. உணர்ச்சி வசப்பட்ட அவர் சிரித்து அதனை மறைத்துக் கொண்டே மேடைக்கு ஏறி கிறிஸ் ரொக்கின் கன்னத்தில் பளார் என அறைந்தார்.

அடியை வாங்கிய அறிவிப்பாளர் ரொக், தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, "தொலைக்காட்சி வரலாற்றில் இன்றிரவு மிகச் சிறந்த ஒரு நாள்" என்று மட்டும் கூறினார். தாக்குதல் குறித்துப் பொலீஸ் முறைப்பாடு செய்வதற்கு அவர் மறுத்துவிட்டார் என்று கூறப்படுகிறது.

ஒஸ்கார் வரலாற்றில் கறைபடிந்தது போன்ற இந்தச் சம்பவம் குறித்து அதன் நிர்வாகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

பூர்வாங்க விசாரணைகளையும் அது தொடக்கியுள்ளது. வில் ஸ்மித் மீது எத்தகைய ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது உடனடியாகத் தெரியவரவில்லை. அவருக்குக் கிடைத்த சிறந்த நடிகருக்கான விருது பறிக்கப்படுமா என்ற கேள்விகளும் எழுந்துள்ளன.

(அ)

# இம்ரான் கான் ஆட்சி தப்புமா?

நாளை வாக்கெடுப்பு!

இஸ்லாமாபாத், மார்ச் 30

பாகிஸ்தானின் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் நேற்று அந்நாட்டு பாராளுமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த நம்பிக்கையில்லா தீர்மானம் மீது நாளை வாக்கெடுப்பு இடம் பெறவுள்ளது.

பாகிஸ்தான் தற்போது கடும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள் ளது. இதற்கு, இம்ரான் கானின் கொள்கைகளே காரணம் என எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டிவருகின்றன.

இதையடுத்து, இம்ரான் கானுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டுவந்துள்ளன. எதிர்க் கட்சிகளுடன் ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் சில எம்.பிக்களும் இம்ரான் கானுக்கு எதிராக போர்க் கொடி தூக்கியுள்ளனர். இதனால் அவரது ஆட்சி நீடிக்குமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்நிலையில் இம்ரானுக்கு எதிராக எதிர்க்கட்சித் தலைவர் ஷபாஸ் ஷெரீப் நம்பிக்கையில்லா தீர்மானத்தை நேற்று முன்தினம் பாராளுமன்றில் தாக்கல் செய்தார். இதை விவாதத்துக்கு எடுத்துக் கொள்வதற்கான வாக்கெடுப்பு நேற்று நடந்தது. மொத்தமுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களில் 20 வீதம் பேர் அல்லது 68 பேரின் ஆதரவு இருந்தால் இந்தத் தீர்மானம் நிறைவேறும்.

இந்நிலையில் தீர்மானத்துக்கு ஆதரவாக 161 பேர் வாக்களித்தனர். இதையடுத்து, நாளை தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

மொத்தமுள்ள 342 பாராளுமன்ற உறுப்பினர்களில் 172 பேர் ஆதரவு இருந்தாலே தீர்மானம் நிறைவேறிவிடும். அதைத் தொடர்ந்து, பதவியில் இருந்து இம்ரான் கான் விலக நேரிடும் என்பதால் பாகிஸ்தான் அரசியல் பரபரப்பாகியுள்ளது.

# உக்ரைன் அமைதி குழுவுக்கு விஷம் வைத்ததா ரஷ்யா?

கீவ், மார்ச் 30

ரஷ்யா - உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வரும் நோக்கத்தில், இரு நாட்டு பிரதிநிதிகள் குழு இடையே அமைதி பேச்சு நடந்து வருகிறது. பல்வேறு சுற்றுப்பேச்சில் இது வரை முடிவு எட்டப்படவில்லை. உக்ரைன் அரசின் வேண்டுகோளை ஏற்று, ரஷ்யாவை சேர்ந்த தொழிலதிபர் ரோமன் அப்ரமோவிக் இந்த அமைதிப் பேச்சில் பங்கேற்று உக்ரைனுக்கு ஆதரவாக பேசி வந்தார்.

இந்நிலையில், தொழிலதிபர் ரோமன் மற்றும் உக்ரைன் அமைதி குழுவை சேர்ந்த இரண்டு பிரதிநிதிகளுக்கு கடந்த மாதம் திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டதாக அமெரிக்காவின், 'வால் ஸ்ட்ரீட் ஜெர்னல்' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

அதில், மூவருக்கும் கண்கள் சிவந்து, முகம் மற்றும் கைகளில் தோல் பகுதி உரிய தொடங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. உக்ரைன் தலைநகர் கீவில் நடந்த பேச்சின் போது இவர்களுக்கு விஷம் வைக்கப்பட்டதாக பத்திரிகையில் செய்தி வெளியாகி உள்ளது. தற்போது அவர்கள் உடல் நிலை தேறி வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# போரைத் தீவிரமாக்கும் முயற்சிக்கு ஐரோப்பா அடிபணிந்துவிடக்கூடாது

## பைடனின் போலந்துப் பேருரைக்கு எதிராக மக்ரோன் ஆட்சேபக் கருத்து



பரிஸ், மார்ச் 30

போரை மேலும் தீவிரமாகத் தூண்டுகின்ற "செயல்கள்", "வார்த்தைகள்" தவிர்க்கப்பட வேண்டும் என்று அதிபர் மக்ரோன் கூறியிருக்கிறார். ரஷ்ய அதிபர் புடினை "சர்வாதி காரி" கசாப்புக்கடைக்காரர் "என்று வர்ணித்து ஜோ பைடன் போலந்து நாட்டில் கூறிய வார்த்தைகளுக்கு எதிராகவே மக்ரோன் இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார்.

"இதுபோன்ற வார்த்தைகளை நான் பயன்படுத்தப் போவதில்லை. ஏனெனில் நான் புடினோடு தொடர்ந்தும் பேச்சுக்களில் ஈடுபட்டுவருகிறேன்.." என்றும் அவர் கூறியிருக்கிறார்.

"உக்ரைனில் ரஷ்யா தொடங்கியுள்ள போரை நாங்கள் போருக்குச் செல்லாமலேயே நிறுத்த விரும்புகிறோம். இதுவே எங்கள் குறிக்கோள்.

நாம் அதைச் செய்ய விரும்பினால், நமது வார்த்தைகளையோ செயலையோ தீவிரமாக்கக்கூடாது... "

"ஐரோப்பியர்கள் சில விரிவாக்கங்களுக்கு அடிபணியக் கூடாது.நமது புவியியல் மற்றும் நமது வரலாற்றை மறந்து விடக் கூடாது. நாங்கள் ரஷ்ய மக்களுடன் போரில் ஈடுபடவில்லை" என்று அவர் வலியுறுத்தினார்,

"ஐரோப்பா இனிமேலும் மொஸ்கோவிற்கும் வோஷிங்டனுக்கும் இடையிலான பனிப் போர்க் காலச் சூழ்நிலைக்குள் இருக்கப் போவதில்லை" - என்பதையும் மக்ரோன் சுட்டிக் காட்டியுள்ளார்.

போலந்து தலைநகர் வார்ஸோவில் ஜே பைடன் ஆற்றிய பேருரையில் புடினின் அதிகாரத்தை நேரடியாகவும் தகாத வார்தைகளாலும்" உணர்ச்சி வசப்பட்டுச்" சாடியுள்ளார் என்று சர்வதேச அவதானிகள் கருதுகின்றனர்.

அரசியல் படைபலம், பொருளாதார நிலைகளில் பார்த்தால் அமெரிக்க அதிபர் இவ்வாறு தனக்கு நிகரற்ற ரஷ்யா மீது கருத்துக்களால் தாக்குவதற்கு அருகதையுடையவர் என்று வேறு சில கொள்கை வகுப்பாளர்கள் கூறுகின்றனர்.

புடினின் கோபத்தைக் கிளறாமல் அவரை அணுகிப் போரை முடிவுக்குக் கொண்டு வர விரும்புகின்ற ஐரோப்பியத் தலைவரான மக்ரோனை அமெரிக்காவின் போர் விரிவாக்கப் பேச்சுகள் பொறுமையிழக்கச் செய்துள்ளன. புடினுடன் தொடர்பைப் பேணக்கூடிய ஒரே தலைவராகவும் புடின் செவிமடுக்கக் கூடிய குரலுடைய ஒரே நண்பராகவும் விளங்கும் மக்ரோன் ஐரோப்பாவின் பாதுகாப்புத் தொடர்பான "யதார்த்த நோக்கத்தில்" மொஸ்கோவை வெளியே விலக்கி வைக்க விரும்பாதவர். தார்மீக ரீதியில் நேட்டோவுக்கு ஆதரவாகச் செயற்பட்டாலும் புடினோடு சமாதான முறையில் இணக்கம் காண்பதிலேயே மக்ரோன் கவனம் செலுத்திவருகிறார். போருக்கு முன்னரும் பின்னருமான அவரது பல செயற்பாடுகள் இதனையே வெளிப்படுத்துவதாக அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

(அ)

# சர்வதேச ஊடகங்களுக்கு ஆப்கானில் தடை

காபூல், மார்ச் 30

ஆப்கானில் பி.பி.சி, வொய்ஸ் ஒவ் அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச ஊடகங்களுக்கு தலிபான் அரசு தடை விதித்துள்ளது.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றினர். அதன்பின்னர் அங்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக பெண்களுக்கு கல்வி, வேலை மற்றும் ஊடகங்களுக்கு கட்டுப்பாடுகள் அதிகம் இருந்து வருகின்றன. இதற்கு உலக நாடுகளும் கண்டனம் விதித்து வருகின்றன.

ஏற்கெனவே ஊடகங்களைப் பொருத்தவரை 40வீதம் வரையிலான ஊடகங்கள் ஆப்கனில் மூடப்பட்டு விட்டன.

இந்நிலையில், பிபிசி, வொய்ஸ் ஆப் அமெரிக்கா, ஜெர்மன், சீன ஊடகங்களுக்கு அங்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. உள்ளூர் ஊடகங்கள் மூலமாக ஒளிபரப்பப்படும் அனைத்து சர்வதேச ஊடகங்களின் நிகழ்ச்சிகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

## ஐ. பி. எல். இருபது - 20 தொடர்:

# சமியின் துல்லிய பந்தில் வீழ்ந்தது லக்னோ அணி!



மும்பை, மார்ச் 30

முஹமது சமியின் துல்லியமான பந்துவீச்சு - டேவிட் மில்லர், ராகுல் தெவாட்டியா, அபிநவ் மனோகரின் அதிரடி துடுப்பாட்டமும் கைகொடுக்க வெற்றியுடன் தனது தொடரை ஆரம்பித்தது குஜராத் டைட்டன்ஸ் அணி.

ஐ. பி. எல். என்று அழைக்கப்படும் இருபது - 20 தொடர் தற்போது இந்தியாவில் நடக்கிறது. இதில் நேற்று முன்தினம் இரவு நடந்த ஆட்டத்தில் இம்முறை புதிதாகக் களமிறங்கிய லக்னோ சுப்பர் ஜயன்ஸ் - குஜராத் டைட்டன்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற குஜராத் டைட்டன்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதனால், லக்னோ அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

அணித் தலைவர் கே. எல். ராகுல், குயின்ரன் டி கொக் இணை தொடக்கம் கொடுத்தது. முதல் பந்திலேயே ஓட்டம் எதுவும் எடுக்காமல் சமியின் பந்தில் ஆட்டமிழந்தார் கே. எல். ராகுல்.

தொடர்ந்து, குயின்ரன் டி கொக் 7 ஓட்டங்கள், மனீஸ் பண்டே 6 என அடுத்தடுத்து விக்கெட்களை வீழ்த்தினார் சமி.

ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த தீபக் ஹூடா, ஆயுஸ் பதோனி ஆகியோர் அபாரமான இணைப்பாட்டத்தை ஏற்படுத்தினர். நிதானித்து ஆடிய இந்த இணை அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தியது.

ஹூடா 41 பந்துகளில் 6 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 55 ஓட்டங்களையும், பதோனி 4 பௌண்ட்ரிகள், 3 சிக்ஸர்களுடன் 41 பந்துகளில் 54 ஓட்டங்களையும் குவித்து ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த குர்னல் பாண்ட்யா ஆட்டமிழக்கால் 21 ஓட்டங்களை எடுத்தார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்த லக்னோ அணி 158 ஓட்டங்களை எடுத்தது.

குஜராத்தின் பந்துவீச்சில் சமி 3 விக்கெட்களையும் அரோன் 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

159 என்ற இலகுவான இலக்கு நோக்கி துடுப் பெடுத்தாடிய குஜராத் அணியும் ஆரம்பத்தில் தடுமாறியது. தொடக்கம் கொடுத்த சுப்மன் கில் ஓட்டம் எதையும் பெறாமல் ஆட்டமிழந்தார். மற்றொரு தொடக்க வீரரான மத்தியூ வேட் நிதானம் காட்ட, மறுமுனையில் வந்த விஜய் சங்கர் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

எனினும், பின்னர் ஹார்திக் பாண்ட்யா 33, மத்தியூ வேட் 30, டேவிட் மில்லர் 30 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தனர்.

இறுதியில் அதிரடியாக ஆடிய ராகுவல் தெவாட்டியா 24 பந்துகளில் 5 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களுடன் 40 ஓட்டங்களை குவித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார். இறுதியில் 19.4 ஓவர்களில் குஜராத் அணி 5 விக்கெட்களை இழந்து 161 ஓட்டங்களை எடுத்திருந்தது.

லக்னோவின் பந்துவீச்சில் துஷ்மந்த சாமீர 2 விக்கெட்களை கைப்பற்றினார்.

போட்டியின் நாயகனாக முஹமது சமி தெரிவானார். (ஐ)



## உதைபந்தாட்ட உலகக் கிண்ணம் 36 ஆண்டுகளின் பின் கனடா தகுதி!

ரொறன்ரோ, மார்ச் 30

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் பங்கேற்க 36 ஆண்டுகளுக்குப் பின்னர் கனடா அணி தகுதி பெற்றுள்ளது.

சர்வதேச உதைபந்தாட்ட கூட்டமைப்பு ('பிபா') சார்பில் உலகக் கிண்ண உதைபந்தாட்டம் தொடர் கட்டாரில் வரும் நவ. 21 - டிசெ. 18 வரை நடக்கவுள்ளது. மொத்தம் 32 அணிகள் 8 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு போட்டிகள் முதலில் லீக் முறையில் நடக்கும்.

இதற்கான தகுதிச்சுற்று போட்டிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. தென்னமெரிக்க நாடுகளுக்கு இடையிலான மூன்றாவது தகுதிச்சுற்றில் 8 அணிகள் மோதுகின்றன.

ரொறன்ரோ நடந்த போட்டியில் கனடா, ஜமைக்கா அணிகள் மோதின.

கனடா அணிக்கு லாரின் (13ஆவது நிமிடத்தில்), புச்சானன் (44), ஹாய்லெட் (83) தலா ஒரு கோல் அடித்தனர்.

ஜமைக்காவின் மரியபா, 88ஆவது நிமிடம் 'சேம் சைட்' கோல் அடித்தார். முடிவில் கனடா அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

13 போட்டிகளில் 8 வெற்றி, 4 சமநிலையுடன் (1 தோல்வி) 28 புள்ளிகள் பெற்ற கனடா அணி, பட்டியலில் முதலிடம் பிடித்தது.

1986ஆம் ஆண்டுக்கு பின் அதாவது 36 ஆண்டுக்குப் பின் உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் பங்கேற்க கனடா அணி தகுதி பெற்றது. (ஐ)

## மியாமி ஓப்பன் தொடர் படோசா, இகா காலிறுதியில்!

மியாமி, மார்ச் 30

மியாமி ஓப்பன் ரென்னிஸ் தொடரில் முதல்நிலை வீராங்கனையான இகா ஸ்வியாரெக், படோசா ஆகியோர் காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

பிரபலமான மியாமி ஓப்பன் ரென்னிஸ் அமெரிக்காவின் மியாமி நகரில் நடக்கிறது. இதில் காலிறுதிக்கு முந்தைய சுற்றுப் போட்டிகள் நேற்று நடந்தன.

ஸ்பெய்னின் பவுலா படோசாவை செக் குடியரசின் லிண்டா புருவிரோட்வோ எதிர் கொண்டார். இதில், படோசா 6 - 2, 6 - 3 என்ற கணக்கில் இலகுவாக வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றார்.

மற்றொரு போட்டியில் முதல்நிலை வீராங்கனையான போலந்தின் இகா ஸ்வியாரெக் அமெரிக்காவின் கோகோ கௌபை எதிர்த்து ஆடினார். இதில், ஸ்வியாரெக் 6 - 3, 6- 1 என்ற கணக்கில் இலகுவாக வெற்றி பெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றார். (ஐ)







## தமிழ் முறைப்படி திருமணத்தில் இணைந்த மக்ஸ்வெல் தம்பதி!

சென்னை, மார்ச் 30

அவுஸ்திரேலிய தமிழ்ப் பெண் வினி ராமனை 2017 முதல் காதலித்து வந்தார் மக்ஸ்வெல். அண்மையில் இருவரும் திருமண பந்தத்தில் இணைந்தனர்.

திருமணப் படங்களை இருவரும் சமூகவலைத்தளங்களில் பகிர்ந்திருந்தனர்.

இந்நிலையில் சென்னையில் மக்ஸ்வெல் - வினி ராமன் இருவருக்கும் தமிழ் முறைப்படியும் திருமணம் நடைபெற்றது.

தமிழ்த் திருமணங்களில் உள்ள மூன்று முறை மாலை மாற்றுதல் சடங்கில் மக்ஸ்வெல்லும் வினி ராமனும் கலந்துகொண்ட காணொலி சமூகவலைத்தளங்களில் வெளியாகியுள்ளது.

ஐ. பி. எல். தொடரில் மக்ஸ்வெல்லை 11 கோடி இந்திய ரூபாய்க்கு பெங்களூர் அணி தக்கவைத்திருந்தது. இன்னும் ஓரிரு தினங்களில் அவர் அணியுடன் இணையவுள்ளார்.

## ஆஸி. அணியிலிருந்து அஸ்ரன் அகர் நீக்கம்!

சிட்னி, மார்ச் 30

அவுஸ்திரேலியாவின் சுழல் பந்துவீச்சாளர் அஸ்ரன் அகருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரிலிருந்து அவர் நீக்கப்பட்டுள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை அவருக்கு நடத்தப்பட்ட பி. சி. ஆர். சோதனையிலேயே தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. முன்னதாக ஜோஷ் இங்கிலீஸுக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.


இவர்கள் இருவரின் நீக்கமும் அவுஸ்திரேலிய அணிக்கு மேலும் பெரும் பின்னடைவை தரும் என்று எதிர்வுகூறப்படுகின்றது. ஏனெனில், காயம் காரணமாக மிற்செல் மார்ஷும், ஸ்ரீவன் ஸ்மித்தும் இந்தத் தொடரிலிருந்து ஏற்கனவே விலகியுள்ளனர். இந்நிலையிலேயே தொற்றால் இரு வீரர்களும் நீக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஒருநாள் தொடரில் இரு சுழல் பந்துவீச்சாளர்களை களமிறக்க அவுஸ்திரேலியா திட்டமிட்டிருந்தது. இதனால், மிற்செல் ஸ்வெப்சன் அடம் ஷம்பாவுடன் இணைந்து விளையாடுவார் என்று அறிய வருகிறது. (ஐ)



# அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் வந்தால் சாதகமாக பரிசீலனை!

## ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு



கொழும்பு, மார்ச் 30

**“அரசுக்கு எதிராக நியாயமான விடயங்களை முன்வைத்து நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவரப்படுமானால் அது பற்றி சாதகமாகப் பரிசீலிக்கலாம்.”**

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி. ஊடகங்களிடம் தெரிவித்தார்.

எனினும், உள்நோக்கம் இருக்குமானால் அதனை ஏற்க முடியாது. அதேபோல் இனவாத ரீதியிலான அரசியலையும் நாம் நிராகரிப்போம் என்றும் ரணில் குறிப்பிட்டார்.

தற்போதைய சூழ்நிலை ஆட்சி மாற்றத்துக்கு உகந்த தருணம் அல்ல எனவும், நாட்டை மீட்க அனைவரும் ஒன்றுபட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்பதற்கு தாம் எடுத்த முடிவில் எவ்வித தவறும் இல்லை எனவும் அவர் மேலும் கூறினார். (ஐ)





# கட்டுப்பாட்டை இழந்த பட்டா வாகனம் மோட்டார் சைக்கிள்களை மோதியது!

## ஒருவர் சிறு காயங்களுக்கு இலக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 30

வேகக் கட்டுப்பாட்டை இழந்த பட்டா ரக வாகனம் வீதியோரமாக நின்ற இரு மோட்டார் சைக்கிள்களை பாலத்துக்குள் மோதித் தள்ளியது. இந்த விபத்தில் ஒருவர் காயங்களுக்கு இலக்கானார்.

இந்த விபத்து புத்தூர் - ஆவரங்காலில் நேற்று மாலை இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பட்டா வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரமாக நின்ற மோட்டார் சைக்கிள்களை மோதியது.

இதில், பட்டா வாகனமும் மோட்டார் சைக்கிள்கள் இரண்டும் கடுமையாக சேதமடைந்தன. மோட்டார் சைக்கிளுடன் நின்ற ஒருவர் சிறு காயங்களுக்கு இலக்கானார்.

பட்டா ரக வாகன சாரதியின் கவனக்குறைவே விபத்துக்குக் காரணம் என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-3)

# வாகன இலக்கத் தகடுகளை உள்நாட்டில் தயாரிக்க முடிவு

கொழும்பு, மார்ச் 30

இலங்கையில் முதன்முறையாக கொலன்னாவையில் உள்ள அரச தொழிற்சாலை ஊடாக வாகன இலக்கத் தகடுகளை தயாரிக்க தீர்மானித்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பை தக்கவைத்துக் கொள்ளும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

முதன்முறையாக வாகன இலக்கத் தகடுகளை உள்நாட்டிலேயே தயாரிப்பதன் மூலம், ஆண்டுதோறும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் பெரும் தொகை பணத்தை சேமிப்பதே இதன் மற்றுமொரு நோக்கமாகும்.

உள்ளூர் தனியார் நிறுவனம் மூலம் தற்போது நடைமுறைப் படுத்தப்படும், உள்ள வாகன இலக்கத் தகடுகளை இறக்குமதி செய்வதற்கான ஒப்பந்தம் 2024 ஆம் ஆண்டு காலாவதியாகவுள்ளதுடன், அதன் பின்னர் அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களத்தினால் இந்த இலக்கத்தகடுகள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்படவுள்ளன. (ஐ)

# கொரோனாவுக்கு நால்வர் மரணம்!

கொழும்பு, மார்ச் 30

கொரோனா தொற்றால் நேற்றும் நால்வர் மரணமாகினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நேற்று முன்தினம் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டன என்று அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இது வரையில் கொரோனா தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 16 ஆயிரத்து 469 ஆக அதிகரித்துள்ளது. (ஐ)

# இலங்கை - ரஷ்யா இடையே மீண்டும் விமான சேவை!



கொழும்பு, மார்ச் 30

இடைநிறுத்தப்பட்டுள்ள சிறீலங்கன் எயார் லைன்ஸின் இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான விமான சேவையை விரைவில் மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்து வருவதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதற்காக மாற்றுக் காப்புறுதித் திட்டத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சிறீ லங்கன் எயார் லைன்ஸினால் இயக்கப்படும் கட்டுநாயக்க - மொஸ்கோ நேரடி விமான சேவை நேற்று முதல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. சிறீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விமானங்களுக்கு காப்புறுதி செய்திருந்த பிரித் தானிய விமான நிறுவன மானது, ரஷ்யாவிற்கு பயணிக் கும் சிறீ லங்கன் விமான காப்பு றுதியை இரத்து செய்தமையே இதற்கு காரணமாக அமைந்தது. (ஐ)

# பிம்ஸ்ரெக் மாநாட்டில் ஜனாதிபதி இன்று உரை!

கொழும்பு, மார்ச் 30

பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்முயற்சியின் (பிம்ஸ்ரெக்) 5ஆவது மாநாட்டின் இரண்டாம்நாள் நிகழ்வான அமைச்சர் மட்டக்கூட்டம் நேற்று கொழும்பில் அமைந்துள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், தாய்லாந்து மற்றும் மியன்மார் ஆகிய 7 நாடுகள் அங்கம்வகிக்கும் இந்த பிம்ஸ்ரெக் அமைப்பின் 5ஆவது மாநாடு நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமான நிலையில், மாநாட்டின் இரண்டாவது நாளான நேற்று நடைபெற்ற 18 ஆவது அமைச்சு மட்டக்கூட்டத்தில் உறுப்புநாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி வெளிவிவகார அமைச்சர்கள் கலந்துகொண்டனர்.

இதன்படி பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, நேபாளம், தாய்லாந்து ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களான (முறையே) கலாநிதி ஏ. கே.அப்துல் மொமென், கலாநிதி தன்டி டோர்ஜி, கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், கலாநிதி நாராயண் கட்கா, டொன் ப்ரமுத்வினை ஆகியோர் மாநாட்டில் பங்கேற்றிருந்தனர். அத்துடன், மியன்மார் சார்பில் அந்நாட்டின் இலங்கைக்கான தூதுவர் கலந்துகொண்டிருந்தார்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸின் உரையுடன் இந்த மாநாடு ஆரம்பமானது. அதனைத்தொடர்ந்து ஏனைய உறுப்புநாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் உரைகளும் இடம்பெறவிருந்த போதிலும், அமைச்சர் பீரிஸின் உரையைப் பார்வையிடுவதற்கு மாத்திரமே ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

இவ்வாறானதொரு பின்னணியில் மாநாட்டின் மூன்றாம் நாளான இன்று காலை 9 மணிக்கு பிம்ஸ்ரெக் அமைப்பின் 5ஆவது அரசதலைவர்கள் மாநாடு நடைபெறவிருப்பதுடன் இதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மெய்நிகர் வழியே உரை நிகழ்த்துவார். அதனைத்தொடர்ந்து உறுப்பு நாடுகளின் அரசதலைவர்களும் மெய்நிகர் வழியில் உரையாற்றுவர். அத்தோடு இம்மாநாட்டில் பிம்ஸ்ரெக் சாசனம் ஏற்கப்பட்டு, பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 31 இலட்சம் குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு

கொழும்பு, மார்ச் 30

வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு இரண்டு மாதங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபாயை சிறப்புக் கொடுப்பனவை வழங்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

வருமானம் குறைந்த 31 இலட்சம் குடும்பங்களை அடையாளம் காண்டு ஏப்ரல் மற்றும் மே என 2 மாதங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை பண்டிகைக் காலத்தில் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இன்று...

இரவு 10 மணி வரையும் மின்வெட்டு நடைமுறையில் இருக்கும். அத்துடன், ஏ, பி, சி, டி, ஈ, எவ், வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களில் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 6 மணி வரையும் பின்னர் நள்ளிரவு 12 மணி வரையும் தொடர்ச்சியாக மின்வெட்டு நடைமுறையிலிருக்கும்.

ரி, யூ, வி, டபிள்யூ உட்பட்ட பகுதிகளில் காலை 8 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரையும் பின்னர், மாலை 6 மணி தொடக்கம் இரவு 10 மணி வரையும் மின்வெட்டு நடைமுறையாகும். இதேபோன்று, பி, கியூ, ஆர், எஸ், ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களில் பிற்பகல் 2 மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணி வரை தொடர்ச்சியாக மின்வெட்டு நடைமுறைக்கு வரும்.

இதேவேளை, காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரையும் எம், என், ஓ, எக்ஸ், வை, சற் வலயங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் மின்வெட்டு அமுலாகும் என்று பொதுப்பயன்பாட்டு ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

## தேசிய அரசும்...

னமும் இருக்கின்றது. அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்வோர் தொடர்பில் நாம் கவனம் எடுத்துள்ளோம். அவர்களின் கனவு ஒருபோதும் நனவாகாது. நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை விரைவில் முடிவுக்கு வரும்" - என்றார். (ஐ)

## ஐந்தில்...

யுள்ளார் என்று சமீபத்திய கணக்கெடுப்பு வெளிப்படுத்தியுள்ளது.

இந்த உடல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம், தங்கள் கணவர், இணைந்து வாழும் துணை அல்லது காதலன் என நெருங்கிய கூட்டாளிகளிடம் இருந்து நிகழ்ந்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் கொழும்பு அலுவலகம் நேற்று முன்தினம் காலை கொழும்பில் உள்ள ஹில்டன் ரெசிடென்ஸில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் துறை நடத்திய மகளிர் நல ஆய்வு முடிவு மூலம் இந்தத் தகவல் தெரியவந்துள்ளது.

இந்த கணக்கெடுப்பின் தரவுகளின் பகுப்பாய்வு, இதுபோன்ற உடல் ரீதியான துஷ்பிரயோகங்களை அனுபவித்த பெரும்பாலான பெண்களும் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகியிருப்பது தெரியவந்துள்ளது. பெண்களைக் கட்டுப்படுத்துவதில் அவர்களின் பங்குதாரரின் செல்வாக்கு, 19.1 சதவீதமாக கண்டறியப்பட்டது. (ஐ)

## வடக்கு மக்களின்...

புற மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர் என் றும் சீன கட்டுமான நிறு வனம் இந்த திட்டத்தை முன்னெடுத்ததை தொடர்ந்து, அப்பகுதி மக்கள் மகிழ்சியடைந்திருக்கின்றனர என வும் கிராமங்களை சேர்ந்த பலர் சீன கட்டுமான பணியில் வேலைசெய்து நன்மைகளை பெற்றிருக்கின்றனர என வும் திட்டத்தின் முகாமையாளர் லியு ஹன்பெங் கூறியுள்ளார்.

வீதி புனரமைப்பால் வழக்கமான போக்குவரத்தில் சில இடையூறுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால், அவை தற்காலிகமானது என்றும் அவர் தெரிவிக்கின்றார்.

சீன நிறுவனத்தின் பணி தொடர்பில் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்திக்கும் கருத்துக்களையும் சீன செய்தி சேவை பதிவு செய்திருக்கின்றது.

மரகரம்பலை விநாயகர் வித்தியாலயத்தின் அதிபர், மஞ்சூரியா தேவி திருவருள் நேசன் - இந்த வீதிகள் தங்களின் பாடசாலையில் கற்கும் 250 மாணவர்களுக்கு நம்பிக்கை ஊட்டியிருப்பதாக கூறுகின்றார்.

39 வயது, சந்திரமோகன் சசிகலா, தனது பிள்ளைகளை வளர்ப்பதற்கு சிரமப்பட்டதாகவும் ஆனால், சீன கட்டுமான நிறுவனத்தில் இணைந்து பணியாற்றியதன் மூலம், அவரது குடும்பத்தின் பொருளாதார நிலைமை உயர்ந்திருப்பதாகவும் கூறுகின்றார்.

சீன கட்டுமான நிறுவனம் வவுனியாவில் மேற்கொண்டுவரும் வீதிபுனரமைப்பு திட்டம் தொடர்பில் ஸின்குவா செய்தி இவ்வாறான பல்வேறு விடயங்களை சுட்டிக்காட்டியிருக்கின்றது.

## இந்திய...

அவர் தனது ருவிட்டர் பதிவிலேயே இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார். பிம்ஸ்ரெக் மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் 3 நாள் உத்தியோகபூர்வ பயணமாக கொழும்பு வந்துள்ளார். இங்கு பல்வேறு சந்திப்புக்களிலும் ஈடுபட்டு வருகின்றார்.

இந்நிலையில், சுப்பிரமணியன் சுவாமி தனது ருவிட்டர் பதிவில் வெளிவிவகார அமைச்சர் மீது கடும் விமர்சனங்களை முன்வைத்துள்ளார். "சமீபத்தைய பயணத்தின்போது முன்னாள் ஆணையாளர் போன்று கொழும்பில் சுற்றித் திரிந்தார் என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இலங்கை அரசாங்கம் பெற்றோல் தட்டுப்பாட்டை திறமையாக நிர்வகிக்கிறதா என்பதை சரிபார்க்க ஒரு எரிபொருள் நிரப்பு நிலையத்தைக்கூட ஆய்வு செய்தார். அவர் நம் உறவுகளை அழிக்க விரும்புகிறாரா? இந்தியவில் ஏன் ஆய்வு செய்யக்கூடாது என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (ஐ)

## தமிழ்...

விஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவை மக்கள் திறமையானவராகப் பார்க்கின்றனர். இதனால், அவர் மீது வதந்திகள் பரப்பப்படுகின்றன. தற்போதைய பொருளாதார நெருக்கடியை அவரால் தீர்க்க முடியும் என்று மக்கள் நினைக்கத் தொடங்கி விட்டனர். வரும் தமிழ் - சிங்கள புதுவருடத்தின் பின்னர் பாராளுமன்றத்தின் அமைப்பில் மாற்றம் ஏற்படலாம்.

இலங்கையின் பொருளாதாரம் குறித்து சர்வதேச நாணய நிதியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இலங்கை வங்குரோத்து அடைத்துவிட்டதாக மறைமுகமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னர் நாம் வழங்கிய ஆலோசனையை அரசு புறக்கணித்ததே நெருக்கடிக்கு காரணம்.

## பிரச்னைகள்...

எனது பதவிக்காலம் முடியும் வரை நான் நாட்டின் பிரதமராக நீடிப்பேன். அடுத்த தேர்தலுக்குப் பிறகும் நாங்கள் வெற்றி பெறுவோம்.

எனக்கு இன்னும் சிறிது காலம் இருக்கிறது. உடனே ஓய்வு பெறமாட்டேன். தேசிய அரசு தொடர்பில் வெளியாகும் ஊகங்கள் அனைத்தும் வதந்தி.

தற்போதைய நெருக்கடிகளான பொருளாதாரம், மின்சாரம், எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு போன்ற பிரச்சினைகள் அனைத்தையும் அரசு விரைவில் தீர்க்கும்-என்றார். (அ)

## வல்வெட்டித்துறை...

எல்லை தாண்டி வந்த காரணத்திற்காக இவர் கைது செய்யப்பட்டுள்ளாரெனத் தெரிவிப்பப்பட்டுள்ளது.

கைதான இலங்கை மீனவர் யாழ்ப்பாணம் - , வல்வெட்டித்துறை - ஆதிகோவிலடியை சேர்ந்த சாந்தரூபன் என்பவராவார்.

கைது செய்யப்பட்ட மீனவரையும், படகையும் கோடியக்கரை கடல் பகுதிக்கு அருகே கொண்டு வந்து வேதாரண்யம் கடலோர காவல் நிலைய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ஐ)



# ஹர்ஷ டி சில்வாவுக்கு நன்றி கூறிய அமைச்சர் ஜெய்சங்கர்

கொழும்பு, மார்ச் 30

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் 1990 சுவசெரிய சேவையினை அறிமுகப்படுத்திய, பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா ஆகியோருக்கு இடையில் நேற்று பிற்பகல் இராஜ கிரியவில் உள்ள 1990 தலைமையகத்தில் விசேட கலந் துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, இந்தியாவின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட 1990 அம்புலன்ஸ் சேவையின் தற்போதைய நிலை குறித்து மிகவும் மகிழ்ச்சியடைவதாக அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இலங்கைக்கு தமது ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்த அமைச்சர் ஜெய்சங்கர், 1990 சுவசெரியவை இலங்கையில் ஆரம் பிப்பதற்கு கலாநிதி ஹர்ஷ டி சில்வா மேற்கொண்ட அர்ப்பணிப்புக்காக விசேட நன்றியையும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே உட்பட மேலும் பலர் கலந்துகொண்டனர். (அ)

# நாவற்குழியில் வீடுடைத்து நகை திருடிய இருவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 30

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழி பகுதியில் அரச உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டில் பகல் வேளையில் வீட்டை உடைத்து 7 பவுண் தங்க நகை திரு டிய சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் நேற்று யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் திருடப்பட்ட நகையும் மீட்கப்பட்டுள் ளது. கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். (அ)

# முல்லைத்தீவு மாணவனை காணவில்லையென புகார்!

முல்லைத்தீவு, மார்ச் 30

பாடசாலை மாணவன் ஒருவர், வீட்டை விட்டு வெளியேறி கடந்த 10 நாள்களுக்கு மேலாகக் காணாத நிலையில், முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர்.

முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி கற்று வரும் உண்ணாப்புலவு பகுதியைச் சேர்ந்த 16 வயதுடைய கே.சானுயன் என்ற மாணவனே கடந்த 17ஆம் திகதி முதல் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

அன்றைய தினம் அவர் மாலை நேர கல்விக்காக வீட்டை விட்டு சென்றுள்ளார். இதுவரையும் மாணவன், வீடு திரும்பாத நிலையில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் பெற்றோர்களால் நேற்று முன்தினம் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த மாணவனை அறிந்தவர்கள் அல்லது தெரிந்த வர்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கோ அல்லது 077 569 0671 கைபேசி இலகத்துக்கோ அறியத்தருமாறு பெற்றோர் கேட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலை மாண வர்கள் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களில் கடந்த காலங்களில் பதிவாகி வருவதாகவும் மாணவர்கள் தொடர்பில் பெற்றோர்கள் அக்கறையுடன் செயற்பட வேண்டும் எனவும் முல்லைத்தீவு பொலிஸார் அறிவித்துள்ளனர். (ஐ)

## 75 வீத...

வுக்கு வழங்கப்பட்டமை தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு பதிலளித்த அவர்,

"இந்தியா எமக்கு நன்கொடைகளை வழங்கியுள்ளது. 75 வீதமான நன்கொடைகளுக்காக அந்தத் தீவுகளை வழங்கவுள்ளோம். அதுமட்டுமல்ல, இந்தப் பகுதிகள் பூகோள அரசியல் ரீதியில் முக்கியத்துவம் பெறுகின்றன. இதனால், அந்தத் தீவுகளை இந்தியாவுக்கு வழங்க முடிவு செய்துள்ளோம் - என்றார். (ஐ)

## அராலியில் திருட்டு!

அராலி செட்டியார்மடத் தில் வீடு ஒன்றில் விலையுயர்ந்த அப்பிள் கைபேசியையும் ஐயா யிரம் ரூபாயையும் திருட்டுப் போயுள்ளது. நேற்று பகல் வீட்டிலிருந்த வர்கள் வெளியே சென்றுவிட்டு வீட்டுக்குத் திரும்பியபோதே இந்த விடயம் குறித்து தெரியவந்தது.

இந்தத் திருட்டுக் குறித்து வட்டுக் கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தமிழ் தேசிய தரப்புகளின் மாற்றத்தை வரவேற்கிறேன்!

## ஜெய்சங்கருக்கு கூறினார் டக்ளஸ்

கொழும்பு, மார்ச் 30

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை தீர்ப்பதற்கான சிறந்த ஆரம்பமாக மாகாண சபை முறைமையே சிறந்த ஆரம்பம் என்ற தனது வழிமுறையை தமிழ் தரப்புக்கள் ஏற்றுக்கொண்டிருப்பதை தாம் வரவேற்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அத்துடன், வடக்கு கிழக்கு பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மை அபிவருத்தி உட்பட பல திட்டங்களுக்கான கோரிக்கைகளையும் இந்தியாவிடம் அவர் முன்வைத்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சரை நேற்று முன்தினம் திங்கட்கிழமை சந்தித்துப் பேசிய போதே மேற்கண்ட விடயங்களை கடற்றொழில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார் என்று அவரின் ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, பருத்தித்துறை மற்றும் பால்சேனை உட்பட வடக்கு கிழக்கு பகுதிகளில் மீன்பிடித் துறை முகங்களை அமைத்து தருவதற்கு ஏற்கனவே இந்தியா சம்மதம் தெரிவித்துள்ள நிலையில், இலங்கை கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் மற்றும் அவற்றை தீர்ப்பதற்கு இந்தியாவால் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. குறிப்பாக, இந்திய கடற்றொழிலாளர் விவகாரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டன.

அத்துடன், வடக்கு, கிழக்கு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மை தொடர்பான சுமார் 23 திட்டங்களைகளை இந்திய வெளியுறவு அமைச்சரிடம் கடற்றொழில் அமைச்சர் முன்வைத்தார்.

அத்துடன், வடகடல் நிறுவனத்தின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கு கடன் திட்டத்தின் அடிப்படையில் 100 மில்லியன் ரூபாய் பெறுமதியான மூலப் பொருட்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள், காங்கேசன்துறைக்கும் நாகப்பட்டினத்திற்கும் இடையிலான சரக்கு கப்பல் போக்குவரத்து, காங்கேசன் துறைக்கும் இராமேஸ்வரம் மற்றும் பண்டிச்சேரி இடையிலான பயணிகள் படகு சேவை, பலாலி - திருச்சி இடையிலான விமானப் போக்குவரத்து சேவை, காரைநகரில் அமைந்துள்ள சீநோர் படகு கட்டும் தொழிற்சாலையை செயற்படுத்துவதற்கு இந்திய முதலீட்டாளர்களின் ஒத்துழைப்புக்களை பெற்றுக் கொள்ளல் போன்ற எதிர்பார்ப்புக்களையும் அவர் வெளியிட்டார். (ஐ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 08 - 03 - 1941 மறைவு 27 - 03 - 2022

### சின்னையா இராமமூர்த்தி

**ஓய்வுபெற்ற இ. போ.ச ஓட்டுநர் (CTB Driver)**

யாழ். மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி உருத்திரபுரம், யாழ். கைதடி மேற்கு, கனடா Milton ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா இராமமூர்த்தி அவர்கள் 27.03.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, இலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும்,நாகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், கஜேந்தினி, கஜேந்திரன், சத்தியேந்திரன், கஜீந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும்,ஞானராசா, கமலினி, ரூபகா ஆகியோரின் அன்பு மாமனாரும்,ஹருணி, கார்த்திகன், யஸ்னிகா, மிசான், மிதுசா, அக்சயா, மகிழினி, மாதுளன் ஆகியோரின் அன்புப் பேரனும்,ராசமணி, கனகமணி, பூமணி, மகிழ்மலர், ஸ்ரீகாந்தலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும்,செல்லமுத்து, அருளானந்தம், காலஞ்சென்றவர்களான முத்துராசா, தாமோதரம்பிள்ளை, நடேஸ்வரன், தயாளன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

பார்வைக்கு
Saturday, 02 Apr 2022 5:00 PM - 9:00 PM
Sunday, 03 Apr 2022 9:00 AM - 10:00 AM
St John's Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

கிரியை
Sunday, 03 Apr 2022 10:00 AM - 12:00 PM
St John's Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

தகனம்
Sunday, 03 Apr 2022 12:00 PM
St John's Dixie Cemetery & Crematorium 737 Dundas St E, Mississauga, ON L4Y 2B5, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : **குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு :
**கஜனா - மகள்** Mobile : +94772638865
**ராஜன் - மகன்** Mobile : +14163998039
Phone : +16476293058
**சத்தியா - மகன்** Mobile : +14168289246
**கஜி - மகன்** Mobile : +14162781695

## மரண அறிவித்தல்



தோற்றம் 16 - 06 - 2001 மறைவு 26 - 03 - 2022

### சுதர்சிகன் நவஜீவஜோகன்

கனடா Toronto வைப் பிறப்பிடமாகவும், Woodbridge ஐ வதிவிடமாகவும் கொண்ட சுதர்சிகன் நவஜீவஜோகன் அவர்கள் 26-03-2022 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் புலோலியைச் சேர்ந்த ஆழ்வாப்பிள்ளை – தங்கம்மா தம்பதிகள் உடுப்பிட்டியைச் சேர்ந்த இளம்பூரணம் செல்லாச்சி தம்பதிகளின் அன்புப் பேரனும், நவஜீவஜோகன்(புலோலி) புஷ்பராணி (உடுப்பிட்டி) தம்பதிகளின் அன்பு மகனும்,விஜித்திரன், தர்ஷிகன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மங்களநாயகி, குணராஜா, தேவராஜா, ஸ்ரீராஜா ஆகியோரின் அன்பு மருமகனும்,ஆதவன், காலஞ்சென்றவர்களான பேரின்பநாயகம், ஜெயரூபன் மற்றும் அருள்லிங்கம், தேவராணி, குணராணி, ஸ்ரீசெல்வராணி, வசந்தராணி, இன்பராணி ஆகியோரின் அன்புப் பெறாமகனும்,ஆரணி, சுபா, பவா, அபிராமி, காண்டீபன் மிருணன், கீர்திகா, ஜீவிதன், கிருஷ்ணராஜா, உதயரஞ்சன், அனோஜன், தர்ஷினி, கிஷானி, விபீஷன், மதிப்பூரணன், சௌமியா, சாயீஷன், வர்ஷினி, இளம்மருகன் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரரும்,யோஷன், கிரிஷன், மயிஷா, மிலோஜன், மிலானா, சாத்வீக, கதிர் ஆகியோரின் மாமாவும் ஆவார்.

பார்வைக்கு
Tuesday, 29 Mar 2022 7:00 PM - 9:00 PM
Lotus Funeral and Cremation Centre Inc. 121 City View Dr, Etobicoke, ON M9W 5A8, Canada

கிரியை
Wednesday, 30 Mar 2022 6:30 AM - 9:00 AM
Lotus Funeral and Cremation Centre Inc. 121 City View Dr, Etobicoke, ON M9W 5A8, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
**குணராஜா - மாமா**
Mobile : +14168817252

தகவல் : **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



தோற்றம் 29 - 01 - 1931 மறைவு 27 - 03 - 2022

### விஜயரத்தினம் இளையதம்பி

**BSC, இளைப்பாறிய ஆசிரியர்- வேலணை மத்திய கல்லூரி**

யாழ். வேலணை 1ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Markham ஐ வசிப்பிடமாகவும் கொண்ட விஜயரத்தினம் இளையதம்பி அவர்கள் 27.03.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி – பாக்கியலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னையா நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,ஈஸ்வரி(இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், Dr. விஜயலக்சுமி (பிரித்தானியா), Dr. விஜயகலா(கனடா), காலஞ்சென்ற தேவகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான நாகராஜா(இளைப்பாறிய ஆசிரியர்), இராஜரட்ணம்(இளைப்பாறிய ஆசிரியர்), நவரட்ணம் (இளைப்பாறிய ஆசிரியர்) மற்றும் பஞ்சரத்தினம், தவமணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், Dr. ஸ்ரீகெங்கன், சிவதேவன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை, ஜெகசோதி(ஆசிரியை), பாக்கியலட்சுமி(இளைப்பாறிய ஆசிரியை), நாகராஜா, மகேஸ்வரன், காலஞ்சென்ற விசாலாட்சி(ஆசிரியை), கிருஷ்ணம்மா(இளைப்பாறிய ஆசிரியை), கனகம்மா(இளைப்பாறிய ஆசிரியை), சிவயோகம்மா(இளைப்பாறிய ஆசிரியை), கலைமகள் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரஜித் – Dr. எமி, Dr. சஜித், அஸ்வன், தயான் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

கிரியை
Sunday, 03 Apr 2022 8:00 AM - 12:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம்
Sunday, 03 Apr 2022 1:00 PM
Forest Lawn Mausoleum & Cremation Centre 4570 Yonge St, North York, ON M2N 5L6, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
**Dr. விஜயகலா - மகள்**
Mobile : +14168920987
**Dr. விஜயலக்சுமி - மகள்**
Mobile : +447912504229
**சிவதேவன் - மருமகன்**
Mobile : +16472154396
**Dr. ஸ்ரீகெங்கன் - மருமகன்**
Mobile : +447872626485

தகவல் : **குடும்பத்தினர்.**







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.03.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றையராசி பலன்
7.15 மணி : கதை வழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர்
விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)

பகல்

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-ராஜா ராஜாதான்,தேவ்
தமிழ் படம் திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை
நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10
திரைப்படங்களின் தரவரிசை

இரவு

7.00 மணி : பாரதீ - திருமதி இமெல்டா சுகுமார்
- தேசிய பெண்கள் குழு உறுப்பினர்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
9.30 மணி: பத்துக்கு 10



10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

---

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

---

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

---

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை
(சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்
(மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

---

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு